விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 கார்த்திகை 02 திங்கட்கிழமை (17.11.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 334




## நவ.27 இற்கு முன் கிளிநொச்சியை கைப்பற்றுவதற்கு அரசாங்கம் திட்டம்!

(கொழும்பு)


தமிழீழ விடுதலைப்புலிகளின் வசம் உள்ள கிளிநொச்சி நகரை மாவீரர் தினமான நவம்பர் 27 ஆம் திகதிக்கு முன்னர் கைப்பற்றி அது தொடர்பான அறிவித்தலை வெளியிட அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சிரேஷ்ட அமைச்சர் ஒருவரை மேற்கோள் காட்டி லங்கா டிஸென்ட் என்ற இணையத் தளம் இது தொடர்பான செய்தியை வெளியிட்டுள்ளது.

கிளிநொச்சியை இன்னும் சில தினங்களில் கைப்பற்றிவிட முடியும் என சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளார்.

கிளிநொச்சியைக் கைப்பற்றியதும் அது தொடர்பான கொண்டாட்டங்களுக்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கிளிநொச்சியைக் கைப்பற்றும் படையினரைப் பாராட்டி தேசிய (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத் தமிழர் கொலையைக் கண்டித்து விஜய் ரசிகர்களுடன் உண்ணாவிரதம்



(சென்னை)

இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் கொல்லப்படுவதற்குக் கண்டனம் தெரிவித்து நடிகர் விஜய் தனது ரசிகர்களுடன் சென்னையில் நேற்று உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினார்.

சென்னை சேப்பாக்கம் விருந்தினர் மாளிகை எதிரில் நேற்று விஜய் மற்றும் அவரின் ரசிகர்கள் உண்ணாவிரதம் இருந்தனர். சென்னை, காஞ்சி மாவட்ட ரசிகர்கள் இதில் கலந்து கொண்டனர். அவர்களில் பெரும்பாலானோர் கறுப்பச் சட்டை அணிந்திருந்தனர்.

விஜயின் தந்தையும் திரைப்பட இயக்குநருமான எஸ்.ஏ.சந்திரசேகரன் காலை 8 மணிக்கு (12 ஆம் பக்கம் பார்க்க)

# யுத்தம் நிறுத்தப்படும் வரை

# தி.மு.க. திருப்தி கொள்ளாது

## கலைஞர் கருணாநிதி உறுதி

(சென்னை)

இலங்கையில் யுத்த நிறுத்தம் அமுலாக்கம் செய்யப்படும் வரை திராவிட முன்னேற்றக் கழகம் திருப்தி கொள்ளாது என தமிழக முதலமைச்சர் கருணாநிதி நேற்றுத் தெரிவித்துள்ளார். இதுவே தமது நிலைப்பாடு என்றும் அனைத்துக் கட்சிக் மாநாட்டிலும் இந்தத் தீர்மானமே எடுக்கப்பட்டுள்ளதாகவும் செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்துள்ள கருணாநிதி, இலங்கையில் உள்ள தமிழர்களைப் பாதுகாக்க முடியும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலையில் 6 மணி நேரம் படையினர்-புலிகள் கடும் சமர்

(கிளிநொச்சி)

யாழ்.முன்னரங்க நிலைகளான கிளாலி, முகமாலை, கண்டல் மற்றும் நாகர்கோவில் ஆகிய நான்கு முனைகளிலிருந்து முன்னேற முயற்சித்த படையினருக்கு எதிராகத் தமிழீழ விடுதலைப்புலிகள் சுமார் 6 மணித்தியாலங்களாக மேற்கொண்ட முறியடிப்புத் தாக்குதலில் 18 படையினர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் 29 படையினர் காயமடைந்துள்ளனர் என விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

இம் முறியடிப்புச் சமர் நேற்று முன்தினம் சனிக்கிழமை அதிகாலை 5 மணி தொடக்கம் பகல் 12.10 மணிவரை இடம்பெற்றுள்ளது. இதன்போது தமிழீழ விடுதலைப்புலிகளின் அகோர எதிர்த் தாக்குதலுக்கு முகம் கொடுக்க முடியாமல் படையினர் தமது பழைய நிலைகளுக்குப் பின்வாங்கிச் சென்றதாகவும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இராணுவத்திற்கு உதவியாக வான்படைக்குச் (12 ஆம் பக்கம் பார்க்க)

## ரணில் இன்று இந்தியா பயணம்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இன்று இந்தியாவுக்குச் செல்லவுள்ளார்.

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக இந்தியத் தலைவர்களுக்கு விளக்கமளிக்கும் பொருட்டே அவர் இந்தியா செல்லவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இந்தியாவுக்குச் செல்லும் ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தி ஆகியோரைச் சந்தித்துப் பேசவுள்ளார். (ச-5)

## பூநகரியிலிருந்து விடுதலைப்புலிகள் தந்திரோபாயமாகப் பின்வாங்கல்!

### கொழும்பு ஊடகம் தகவல்

(கொழும்பு)

பூநகரியிலிருந்து தந்திரோபாயமாக பின்வாங்கியிருப்பதாக விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்குக் கூறியிருப்பதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் 3 மாதங்களுக்குள் அரசாங்கம் இராணுவ ரீதியாக அழிக்கப்படும் என அண்மையில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சென்று திரும்பிய நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜெயானந்தமூர்த்தி மற்றும் சந்திரநேரு சந்திரகாந்தன் ஆகியோருடன் விடுதலைப்புலிகளின் தலைவர் தகவல் ஒன்றை பரிமாறியிருந்ததாக சண்டே லீடர் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

வன்னிக்குச் சென்றிருந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனையும் அரசியல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசனையும் சந்தித்திருந்ததாக அந்தப் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் அமைப்பைத் தோற்கடிக்க முடியா (12 ஆம் பக்கம் பார்க்க)

### இலங்கை இனப்பிரச்சினை விவகாரம்

## அடுத்த கட்ட நடவடிக்கை என்ன? சென்னையில் இன்று ஆராய்வு

(சென்னை)

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அடுத்த கட்டமாகத் தமிழகத்திலிருந்து என்ன செய்யலாம் என்பது குறித்து விவாதிக்க இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இன்று திங்கட்கிழமை சென்னையில் அனைத்துக் கட்சிக் கூட்டம் ஒன்றைக் கூட்ட இருக்கின்றது.

தமிழகக் கட்சிகளின் ஒருமித்த கோரிக்கையான போர்நிறுத்தத்திற்கு வாய்ப்பில்லை என்று இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ திட்டவட்டமாகக் கூறியிருக்கும் நிலையில் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து முடிபெடுக்கவே இன்றைய கூட்டம் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநில செயலர் தா. பாண்டியன் கூறியிருக்கின்றார்.

ஆனால் (12 ஆம் பக்கம் பார்க்க)

## பேருந்து சேவைக்கு முன்னர் யாழிற்குப் புகையிரத சேவை

### போக்குவரத்து அமைச்சர் நம்பிக்கை

(கொழும்பு)

ஏ-32 வீதியின் ஊடாக யாழ்ப்பாணத்துக்கான பேருந்து சேவையை விரைவில் மேற்கொள்ளுமாறு இலங்கைப் போக்குவரத்துச் சபை அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளதாகப் போக்குவரத்துத்துறை அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற விசேட நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தப் போக்குவரத்துச் சேவைகளுக்கு முன்னர் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான யாழ்தேவி தொடருந்து சேவையை மீள ஆரம்பிக்கக் கூடியதாய் இருக்கும் என்றும் அவர் நம் (12 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலையம் நடத்திய அபிவிருத்தி மற்றும் சமூக நல்லிணக்கத்தில் ஊடகங்களின் வகிபங்கு பற்றி நேற்று நடைபெற்ற கருத்தரங் கில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி பொன்னம்பலம் ஆகியோர் மங்கல விளக்கேற்றுவதையும் ஊடக வளங்கள் பயிற்சி நிலையப் பணிப்பாளர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை உரையாற்றுவதையும், நிகழ்வில் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம்.

# நூறு கோடி இந்தியர்களின் தன்மானத்துக்கு சவால் விட்டுள்ளார் இலங்கை ஜனாதிபதி

## வை.கோ. அறிக்கை

தமிழ்நாட்டில் ஏழு கோடி மக்களுக்கு மட்டும் அல்ல, நூறுகோடி இந்தியர்களின் தன்மானத்துக்கு, சுயமரியாதைக்கு இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சவால் விடுத்துள்ளார் என்று மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வை. கோ. தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை வை.கோ. வெளியிட்டுள்ள அறிக்கையில், மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, சுதந்திர இந்தியாவின் வரலாற்றிலேயே இந்திய அரசுக்கு ஏற்படாத அவமானம் இப்போது நேர்ந்து விட்டது.

இலங்கைத் தீவில், ஈழத்தமிழ் இனத்தைக் கருவறுக்க, கொடிய இராணுவத் தாக்குதலை நடத்திவரும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இந்தியத் தலைநகரில் நடந்துகொண்ட விதமும், ஆணவத்தோடும், திமிரோடும் இலங்கையில் போர்நிறுத்தம் செய்யமாட்டோம், இராணுவத்தாக்குதலை தீவிரப்படுத்துவோம், விடுதலைப் புலிகளை முற்றாக அழிக்கும் வரை,போரை நிறுத்தப் போவதே இல்லை என்று,கொக்கரித்து விட்டுச் சென்று உள்ளார்.

அதுவும் எந்தநேரத்தில்? எந்தச் சூழ்நிலையில்? இலங்கையில் போர்நிறுத்தம் செய்வதற்கு விடுதலைப் புலிகள் முன்வந்துள்ள நிலையில் இலங்கை அரசும் போர்நிறுத்தம் செய்வதற்கு இந்திய அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்ற தீர்மானம் தமிழகச் சட்டமன்றத்தில் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்ட 48 மணிநேரத்துக்கு உள்ளாக, இலங்கையினால் இவ்வளவு மமதையோடு பேசியது, தமிழ் நாட்டின் 7கோடி மக்களுக்கு மட்டுமல்ல, நூறுகோடி இந்தியர்களின் தன்மானத்துக்கும், சுயமரியாதைக்கும் விடப்பட்டுள்ள சவால் ஆகும்..

இவ்வளவு துணிச்சலாக ராஜபக்ஷ பேசியதற்கு, இந்தியாவின் மன்மோகன்சிங் அரசு தான் காரணம் ஆகும். கடந்த நான்கு ஆண்டு காலமாகவே இலங்கை அரசுக்கு எல்லா விதத்திலும் இராணுவ உதவிகள் அளித்தும், ஆயுதங்கள், ராடர்கள் வழங்கியும் 2000 கோடி ரூபாய் வட்டி இல்லாக்கடன் கொடுத்தும், விமானிகள், இராணுவ வீரர்களுக்கு இந்தியாவில் பயிற்சி கொடுத்தும், இந்திய- இலங்கை கடற்படை தகவல் பரிமாற்ற ஒப்பந்தம் செய்வதும், இந்திய இறையாண்மைக்கே இழுக்கு ஏற்படுத்தும் வகையில், இந்தியக் கடல் எல்லையில் இலங்கை கடற்படை கண்ணிவெடிகளைப் போட அனுமதித்தும், ஐக்கிய நாடுகள் சபையில், இலங்கையில் நடைபெறும் மனித உரிமை மீறல்களைக் கண்டித்து, சுவிஸ்சர்லாந்தும், நியூசிலாந்தும் கொண்டு வந்த தீர்மானத்தை இலங்கை அரசோடு சேர்ந்து எதிர்த்துக் குரல் கொடுத்தும் வந்துள்ளது.

இலங்கை தீவில். மூன்று இலட்சம் தமிழ் மக்கள் இராணுவத் தாக்குதலுக்கும் குண்டு வீச்சுக்கும் நடுவில், மரண பீதியில் துடிக்கின்றனர். தமிழக முதலமைச்சர் கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில், இலங்கையில் இரண்டு வார காலத்துக்கு உள்ளாக போர் நிறுத்தம் ஏற்படாவிடில், தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவி விலகுவார்கள் என்று நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைச் செயல்படுத்த ஏன் முனையவில்லை?

போர்நிறுத்தம் செய்ய இலங்கையை நிர்ப்பந்திக்குமாறு மத்திய அரசை அந்த இரண்டு வார காலத்தில் தமிழக முதல் அமைச்சர் ஏன் வற்புறுத்தவில்லை? 'போர்நிறுத்தம் செய்யுமாறு, இந்திய அரசு எங்களைக் கேட்கவே இல்லை' என்று மகிந்த ராஜபக்ஷவும், பசில் ராஜபக்ஷவும் திமிரோடு சொன்னார்களே?

தாங்கள் நடத்தும் போருக்கு இந்திய அரசு முழுக்க முழுக்க ஆதரவாக இருப்பதால்தான் மகிந்த ராஜபக்ஷ டெல்லியில் மூர்க்கத்தனமாக தடித்த வார்த்தைகளை அகந்தையோடு சொன்னார்.

'கடந்த நான்கு ஆண்டுகளில் ஈழத்தில் தமிழ் மக்கள் கொல்லப்பட்டதற்கும், அவர்கள் சிந்திய ஒவ்வொரு சொட்டு இரத்தத்துக்கும், ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு பொறுப்பு ஏற்க வேண்டும்' என்று, கடந்த இரண்டு ஆண்டு காலமாக நான் குற்றம் சாட்டிவருகிறேன்.

தமிழ் இனத்துக்கு இந்திய அரசு செய்துள்ள துரோகத்தை எதிர்த்து, தமிழக மக்களின் உள்ளம் கொந்தளிக்கும் கடல ஆகும். குமுறும் எரிமலையாக மாறும் என்ற அச்சத்தாலேயே, ஒருபக்கத்தில் போர்நிறுத்தம் செய்வதற்கு உரிய நடவடிக்கைகளை இந்திய அரசு எடுக்காமல், அதற்கு உரிய அரசியல் அழுத்தத்தைத் தமிழக முதலமைச்சரும் ஏற்படுத்தாமலேயே பிரச்சினையைத் திசை திருப்புகின்ற வகையில், மிகத் தந்திரமாக சில நடவடிக்கைகளைக் கையாள்கிறார்கள்.

ஈழத்தமிழர்களின் ஒரே பாதுகாப்புக் கவசம் விடுதலைப் புலிகள்தான். அவர்களை அழித்து விட்டால் பின்னர் தமிழீழ மக்களை நிரந்தரமாக அடிமை இருளில் தள்ளிவிடலாம் என்பதுதான் சிங்கள அரசின் நயவஞ்சகத் திட்டம் ஆகும். இந்தத் திட்டத்துக்கு இந்திய அரசும் உடந்தை ஆகும். இலங்கையில் போர்நிறுத்தம் ஏற்படுத்த நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளாததோடு, அந்த இனக்கொலை யுத்தத்தைப் பின்னிருந்து இயக்கும் இந்திய அரசை, அதன் துரோகத்தை தமிழக மக்களும், இந்திய மக்களும் கடுமையாக எதிர்த்துக் கண்டனம் தெரிவிக்க வேண்டும். அந்தக் கோபாவேச எழுச்சியைக் கண்டதற்குப்பிறகாவது, இந்திய அரசு தன்துரோகச் செயலை நிறுத்திக் கொண்டு இலங்கை அரசு போர்நிறுத்தம் செய்யும் நிர்பந்தத்தை ஏற்படுத்த முன்வரட்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச-5)



அச்சுவேலி குடும்பப் பாடசாலைகளின் தரமான கல்வித்தினம் 2008 நேற்று முன்தினம் அச்சுவேலி சென்.திரேசாள் மகளிர் கல்லூரியில் நடைபெற்றபோது யாழ்.கல்விப் பணிப்பாளர் திருமதி.அ.வேதநாயகம் மற்றும் திரு.வேதநாயகம், யாழ்.பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடாதிபதி க.தேவராஜா, யாழ்.கோப்பாய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.சித்திரவடிவேல், யாழ்.கல்வியியற் கல்லூரி பீடாதிபதி ஆகியோர் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் அழைத்துச் செல்லப்படுவதையும் மங்கல விளக்கேற்றப்படுவதையும் படங்களில் காணலாம்.


## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி

எமது குடும்பத் தலைவர்

**அமரர் இ.சந்திரமௌலீசன்**



அரசகேசரிப் பிள்ளையார் கோவிலடி, நீர்வேலி.

(முன்னாள் முதன்மை எழுதுநர், நகரசபை, சாவகச்சேரி)

திதி: கார்த்திகை மாத அபரபக்கப் பஞ்சமி
17.11.2008 திங்கட்கிழமை

ஆற்றுப் படுத்தலுக்காய்
அனுதினமுஞ் சேவிப்போம்
தேற்றுந் திறமறியோம்
தெய்வமே மீண்டு வாரும்

-குடும்பத்தினர்.

(C-1781)


## சட்டவிரோத மரக்கடத்தலில் ஈடுபட்டவருக்கு 6 மாதச்சிறை

சட்டவிரோதமாக மரக்கடத்தலில் ஈடுபட்ட ஒருவருக்கு பருத்தித்துறை நீதிமன்றம் 6 மாத கால சிறைத்தண்டனையை வழங்கியதுடன் மரங்களை ஏற்றிச்சென்ற வாகனத்தை பறிமுதல் செய்யுமாறும் தீர்ப்பு வழங்கியுள்ளது.

துன்னாலையைச் சேர்ந்த செல்வரட்ணம் பரமேஸ்வரன் என்பவர் அனுமதி பத்திரத்திற்கு கூடுதலான மரங்களை சட்டவிரோதமாக லொறியில் கடத்திச் சென்றபோது நெல்லியடி பொலிஸாரினால் பிடிக்கப்பட்டார்.

இவர் மீது பொலிஸார் பருத்தித்துறை நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்தனர். பருத்தித்துறை மாவட்ட நீதிபதி கே.அரியநாயகத்தால் வழக்கு விசாரணை செய்யப்பட்டது. எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றம் நிரூபிக்கப்பட்டு நீதிமன்றம் குற்றவாளி என தீர்ப்பு வழங்கியது.

அனுமதி பத்திரத்திற்கு மேலதிகமாக கொண்டு சென்ற மரங்களை பறிமுதல் செய்து அதை அரச மரக்கூட்டுத்தாபனத்தில் ஒப்படைக்குமாறும் அனுமதிப்பத்திரத்திற்கு உட்பட்ட மரத்தை உரிமையாளரிடம் ஒப்படைக்குமாறும் பறிமுதல் செய்யப்பட்ட லொறிபற்றி நீதிச் சேவை ஆணைக்குழுவுக்கு அறிவிக்குமாறும் நீதிமன்ற பதிவாளருக்கு நீதிவான் பணித்துள்ளார்.

(ஓ-2,52)

## பட்டமளிப்பு விழா

ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கத்தின் பட்டமளிப்பும் பாராட்டு விழாவும் இலக்கம் 223, காங்கேசன்துறை வீதியில் உள்ள கீழைத்தேயக் கல்விக் கல்லூரியில் எதிர்வரும் 19ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கனும் சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராசாவும் கலந்து கொள்கின்றனர்.

(ச)

# இன்று ஒரு தகவல்

## குருவும் சீடனும்

ஒரு குருநாதர் தியானக் கூட்டங்கள் பலவற்றை நடத்தி வந்தார். அதில் கலந்து கொள்வதற்கென்றே பல ஊர்களிலுமிருந்து ஏராளமான சீடர்கள் வருவது வழக்கம்.

ஒரு நாள் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அந்த சமயத்தில் சீடர்கள் ஒருவன் எதையோ திருடிவிட்டான். மற்ற சீடர்கள்இதைக் கவனித்துக் கொண்டார்கள்.

கூட்டம் முடிந்த பின்பு இவன் திருடிய விஷயத்தை குருவிடம் சொன்னார்கள் ஆனால்அவர் இதைக் கண்டு கொள்ளவேயில்லை.

சீடர்களுக்கெல்லாம் ஏமாற்றமாகிப் போய் விட்டது. “என்ன இது... இவ்வளவு தூரம்சொல்லியும் அவர் காதில் கூட வாங்கிக் கொள்ளவில்லையே!” என்று சலித்துக் கொண்டார்கள்.

இருந்தும் அதைப்பற்றி எதுவும் தெரிவிக்காமல் இருந்து விட்டார்கள். கொஞ்ச நாட்களில் மறுபடியும் அவன் திருட்டில் மாட்டிக் கொண்டான்.

சீடர்கள் மீண்டும் குருவிடம் போய் விஷயத்தைச் சொன்னார்கள்.

அப்பொழுதும்அவர்வழக்கம் போலவே பேசாமல் இருந்து விட்டார்.

இது சீடர்களுக்கு கோபத்தை உண்டாக்கியது.

உடனே அவர்களெல்லாம் ஒன்று சேர்ந்து ஒரு விண்ணப்பத்தை தயாரித்து குருவிடம் கொண்டு போய்க் கொடுத்தார்கள்.

“குரு நாதர் அவர்களே! உடனே திருடியவன்மீது நீங் கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவனை இங்கு சேர்க் கக் கூடாது! இந்த மடத்தை விட்டே துரத்த வேண்டும் இல்லையென்றால் நாங்க அனைவரும் வெளியேறி விடுவோம்!” என்றிருந்தது அந்த விண்ணப்பம்.

குரு அந்த விண்ணப்பத்தைப் படித்துப் பார்த்தார். அதன் பின் எழுதியவர்கள்அனைவரையும் கூப்பிட்டார். அவர்களைஉட்கார வைத்து ,“ இதோ பாருங்கள்... நீங்கள் எல்லோரும் புத்திசாலிகள். உங்களுக்கு நல்லது எது – கெட்டது எது என்று புரியும்.

நீங்கள் மேற் கொண்டு எங்கு வேண்டுமானாலும் போய்ப்படிக்கலாம்.

ஆனால் உங்களால்குற்றம் சாட்டப்பட்ட அவனுக்கு நல்லது எது–கெட்டது எது என்றெல்லாம் தெரியாது. அதனால் தான் அவன் திருடினான். நீங்கள்சொல்வது போல் அவனை அடித்து துரத்தி விட்டால் அவனுக்கு எப்படி நல்லது கெட்டது தெரியும்? அவனுக்கு அதை யார் சொல்லிக் கொடுப்பது? அதனால்அவன்இங்கேயே இருக்கட்டும் அது தான் சரி! இதற்காகநீங்கள்எல்லோரும் என்னை விட்டுப் போனாலும்சரி... அவனை நான் விரட்ட மாட்டேன்!” என்றார்.

இவை எல்லாவற்றையும் திருடிய அந்த சீடன் கேட்டுக் கொண்டிருந்தான். அவன் கண்களில் கண்ணீர் உடனே எழுந்து வந்து குருவின் காலில் விழுந்தான்.

அவன் கண்ணீரில் அவனது தீமை கழுவப்பட்டது. சீடர்களுக்குக் குருவின் பெருமை புரிந்தது.

ஆசிரியர் ஒருவர்நன்றாகப் படிக்கும் மாணவனையே கவனித்து அவனுக்கு பாடம் சொல்லிக் கொடுத்தால் அது பெரிய விஷயமல்ல. படிப்பில் பின் தங்கிய மாணவனையும் முன்னேற்றிக் காட்டுவது தான்பெருமை.

இந்தக் கால குரு ஒருவர் ஆச்சிரமம் நடத்தி வந்தார். நிறையப் பேர் வந்து போவார்கள்

ஒருநாள் ஒருவன் வந்து “ஐயா... என்னை உங்கள் சீடனாக ஏற்றுக் கொள்ள வேண்டும்” என்றான்.

குரு அவனை நிமிர்ந்து பார்த்து,!உன்னுடைய நோக்கம் என்ன? என்று கேட்டார்.

“உங்களுடன்கொஞ்ச நாள் இருந்து நல்லபழக்க வழக்கங்கள் எல்லாம் கற்றுக் கொண்டு ஒருநல்ல தொழில் செய்து முன்னுக்குவர வேண்டும் என்பதுதான் எனது நோக்கம்” என்றார்.

“நீ சொல்வது சரி... ஆனால், உன்னால்இங்கு நல்ல பழக்க வழக்கங்களை கற்றுக் கொள்ள முடிய வில்லை என்றால் என்னசெய்வாய்?” என்று கேட்டார்.

“அப்படி ஆகிவிட்டால்... என்ன .. உங்களை மாதிரியே ஒரு ஆச்சிரமம் ஆரம்பித்து அதற்கு குருவாக இருந்து விட்டுப் போகிறேன்!” என்றான் அவன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வன்னியில் இடம் பெயர்ந்த மக்கள் அத்தியாவசிய தேவைகளின்றி பரிதவிப்பு

## தமிழர் புனர்வாழ்வுக் கழகம்

வன்னியில் உள்ள 3இலட்சத்து 27ஆயிரத்து 230வீதமானோருக்கு தங்குமிட வசதிகள்ஏதும்இல்லை என தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் தெரிவித் துள்ளனர்.

அவர்கள் இது பற்றி மேலும் குறிப்பிடுகையில் ஏற்கெனவே சுனாமியால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மக்களும் மற்றும் இடம் பெய ர்ந்த மக்களும் உணவிற்கும் உறைவி டத் திற்கும் பெரும் அல்லல் படு கின் ற னர்.

வாழ்வாதாரங்கள் மற்றும் பயி ர்ச் செய்கை எதுவுமின்றி முற்று முழுதாக அரச சார்பற்ற நிறுவனங் கள் மற்றும் புலம் பெயர் தமிழர் களின் உதவியை நாடி நிற்கும் இம் மக்களின் பிள்ளைகள் நுளம்பு வலை , பால் மா மற்றும் குடி நீரி ன்றி தவிப்பதாகவும் தமிழர் புனர் வாழ் வுக் கழகத்தினர் தெரிவிக்கின் றனர்.

அவசர தேவைகள் என் ற அடிப் படை யில் தமிழர் புனர்வாழ்வுக் கழ கம் சில தேவைகளை பெயரிட் டுள் ளது.

சுமார்15ஆயிரத்து130 குடும் பங்களுக்கு கூடாரங்களை அமைக்க கூரைத் தகடுகள் சீமெந்து பொதிகள் தேவைப் படுகின்றன.

சுமார் 20ஆயிரம் குடும்பங் களுக்கு உணவற்ற ஏனைய நிவாரணங்கள் தேவைப்படுகின்றன. கர்ப்பிணிதாய்மாருக்குசுமார் மூவாயிரம் பிரசவ ஆடைகள் தேவையாக உள்ளன. சுமார் மூவாயிரம் குழந்தைகளுக்க ஆடைகள் நுளம்பு வலைதேவைப்படுகின்றன. மேலும் தண்ணீர்தாங்கிகள் ,நீர் சுத்தி கரிப்பு வில்லைகள் ,எரி பொருள், தண்ணீர் பௌசர்கள் மற்றும்அவசிய சிகிச்சைகளுக்கு உட்பட்ட சுகாதார மருத்துவ கருவிகள் ஆகியன உடனடியாக தேவை என தமிழர் புனர் வாழ்வுக் கழகம் தெரிவித்துள்ளது. (ஓ–5)

# சர்வதேச ஊனமுற்றோர் தினம்

ஊனமுற்றவர்களுக்கான சர்வதேச தினம் டிசம்பர் மாதம் 3ஆம் திகதி உலகம் முழுவதும் கொண்டாடப்படவுள்ளது. இலங்கையிலும் இத்தினம் கொண்டாடப்படுவது வழமையாகும். இம் முறை இதற்கான கருப்பொருளாக அமைவது ***வலுவிழந்தவர்களின் மனித உரிமைகளைப் பேணுவோம்*** என்பதாகும். இக் கருப்பொருளை மையமாக வைத்து நவம்பர் 27முதல் டிசம்பர் 3ஆம் திகதி வரை ஒரு வாரம் ***ஊனமுற்ற வர்களுக்கான வாரமாக*** (விசேட தேவ்வயுடையோர் வாரம் பிரகடனப் படுத்தப்படவுள்ளது.

இவ் வாரத்தை சகல அரச, அரச சார்பற்ற நிறுவனங்களும் சமூகத்திற்கு விழிப்புணர்வூட்டும்முகமாக நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை உள்ளது. இவ் வாரத்தை சகலபாடசாலைகளிலும்நடைமுறைப்படுத்துமாறு கல்வியமைச்சு அறிவித்துள்ளது. வடக்குமாகா ணக் கல்வித்திணைக்களம் வலயக் கல்வி அலுவலகங்களுக்கு தெரி யப்படுத்தியுள்ளது.

ஊனமுற்றோர் வாரத்தில் பாடசாலைகளிலுள்ள விசேட தேவையுடையமாணவர்களுடன் வகுப்பறையிலுள்ளசாதார ணமா ணவர்களையும் இணைத்துக் கொண்டு நடனம், கட்டுரைப் போட்டி, சித்திரப் போட்டி , பேச்சுப் போட்டி, சுவர்ப் பத்திரிகை தயாரித்தல் போட்டி , பாட்டுப் போட்டி, நாடகப் போட்டி என்பவற்றை நடத்துவதற்கான ஒழுங்குகளை மேற் கொள்ளுமாறு யாழ்ப்பாணக் கல்வி வலய விசேட கல்விப் பிரிவு சகல பாடசாலை அதிபர்களையும்கேட்டுக் கொள்கின்றது. அத்துடன்பாடசாலை மட்டத்தில்இம்முறைகருப்பொருளாக அமைந்துள்ளது. தலையங்கத்தைகருத்திற் கொண் டு பாடசாலையில் நடை பெறும் காலைக் கூட்டத்தில் பேசுவது, மாணவர்களுக்கிடையில் கலந் துரையாடல், விவாதம், போன்ற வற்றையும் நடத்துவது முக்கிய மான்வையாகும். பாடசாலை களில் பதாகைகள் கட்டுவ தும் விரும்பத்தக்கது.

யாழ்ப்பாணக் கல்வி வலய விசேட கல்விப் பிரிவு சர்வதேச ஊனமுற்றோர் தினத்தை முன்னிட்டு பாட சாலைகளில் கல்வி பயில்கின்ற விசேட தேவையுடையமாணவர்களுக்காக பல நிகழ்வுகளையும், போ ட்டி களையும் நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்க வையாகும். அவற்றுள் விசேட தேவையுடைய மாணவர்களின் கல்விச் சுற்றுலா, சித்திர ஆக்கத் திறன் கண்காட்சி, விளையாட்டுப் போட்டி, அழகியல் போட்டி என்பன மிக முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். இம் மாதம் 15ஆம்திகதிவலயமட்டத்தில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களின் விபரம் திறமை ஒழுங்கில் தரப்படுகின்றது.

### 6–8வயதுப் பிரிவு

*கதைகூறல்*

சி.குஜேந்தன்– கொக்குவில் இந்துஆ.பா. , இ. விஷ்ணுஜா–கொக்குவில் இந்துஆ.பா., இ.சாரங்கன்–ஆவரங்கால்நடராஜா இராமலிங்கவித்தி. நி.டிவிந்தன்–கல்வியங் காடு இ.த. க.பா., ச.கபில் ராஜ்– இளைய தம்பி இந்து வித்தி.

தனிப்பாடல்

கூ.ஜென்சன் லெனிஸ்ரன்– கோப்பாய் தெற்கு றோ.க.த.க.பா., க.நிவேக்கா–கோப்பாய் நாவலர் தமிழ் வித்தி., யூ.அபின்சா–திருக்குடும்பகன்னியர் மடம், அ.அலிஸ் அஷிகா–கோண்டாவில்சி.சி.த.க.பா. , ச.மயூரி–கொக் குவில் இந்து ஆ.பா., ச.குதூகலப்பிரியன்–ஆனைப்பந்தி மெ.மி .த.க பா.

தனி நடனம்

ச.மயூரி–கொக்குவில்இந்துஆ.பா., இ.விஷ்ணுஜா–கொக்குவில்இந்து ஆ.பா., உ.றொபின்சிகா–கலட்டிமெ.மி. த.க.பா., சி.டிலானி–முத்துத் தம்பி மகா வித்தி., செ.லாவண்யா–கோப்பாய் தெற்கு றோ.க.த .க.பா., உ.கம்சிகன்–நீர்வேலி தெற்கு இ.த.க.பா.

குழு நடனம்

இருபாலைசி.சி.த.க .பா.

அபிநயப்பாடல் (குழு)

இருபாலை சி.சி.த.க பா.

குழுப்பாடல்

முத்துத்தம்பி மகா வித்தி. ,க ல்வியங்காடு இ.த.க .பா. , ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தி., சிறுப்பிட்டிஇ.த. க.பா.

### 9–12வயதுப்பிரிவு–கதைகூறல்

வி.மதுஷன்–சிறுப்பிட்டிஇ.த. க.பா., செடிக்சன்–புனித ஜோன் பொஸ்கோ வித்தி.,சி.அனுஷன்– ஆனைப் பந்திமெ.மி.த.கபா. ,ந.ஸமீரகு மான்–ஒஸ்மானியாக் கல்லூரி, தி.தினேஸ்குமார்–ஒஸ் மானி யாக்கல்லூரி

தனிப்பாடல்

சி.சிவரூபன்–கலட்டிமெ.மி. த.க பா., பா.யஞ்சன்–ஆனைப் பந்தி மெ.மி. த.கபா. ,க.கஜா னன் –கல்வியங்காடு இ.த.க.பா.,வி.மது ஷன்– சிறுப்பிட்டி இ.த.க. பா. , கு.சசி கன்–கொக்குவில்ஸ்ரீஞானபண்டிதவித்தி., அஸ்வினி–சென் றோக்ஸ் றோ.க. த.க. பா.

தனி நடனம்

கோ.பிரவீனா–திருக்குடும்ப கன்னியர்மடம், இ.குகாஜினி–அச்சுவேலி மத்திய கல்லூரி

குழு நடனம்

உரும்பிராய் றோ.க.த .க.பா., நாயன்மார்க்கட்டு மகேஸ்வரி வித்தி. ,அச்சுவேலிமத்திய கல் லூரி

குழுப்பாடல்

திருக்குடும்ப கன்னியர்மடம், கோண்டாவில் இந்துமகா வித்தி. , ஆனைப்பந்தி மெ.மி.த .க.பா., கல்வியங்காடு இ.த.க.பா.

### 13–15வயதுப்பிரிவு–தனிநட னம்

ர.பிறின்சலா–ஆவரங்கால் மகாஜன வித்தி.

தனிப்பாடல்

ர.பிறின்சலா–ஆவரங்கால்மகாஜன வித்தி., அ.அன்ரனிதாஸ்–கோப்பாய் மகா வித்தி., ப. தாரகன்–ஆவரங்கால் நடராஜா இர ாமலிங்க வித்தி.,க. றொபேந்திரன்–ஊரெழு கணேச வித்தி.,த.கஜீபன்–கோப்பாய் மகா வித்தி.

பேச்சு

ர.பிறின்சலா–ஆவரங்கால் மகாஜன வித்தி. ,கு.தர்சனா–ஆவரங் கால் நடரஜாஇராமலிங்கம் வித்தி.

குழு நடனம்

ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி.,கோப்பாய் மகா வித்தி., ஊரெழு கணேச வித்தி.

குழுப்பாடல்

கோப்பாய் மகாவித்தி.

### 16–19வயதுப்பிரிவு–பேச்சு

இ. கஜன்–ஊரெழு கணேசவித்தி.

**திறந்த போட்டி–சிறுவர் நாடகம்**

சென்ஜேம்ஸ் வித்தி., ஆவரங் கால் இராமலிங்கம் வித்தி.

# இராசி பலன்

*. 17.11.2008*
*(கார்த்திகை 2 , திங்கட்கிழமை)*
*பஞ்சமி பின்னிரவு 1.28மணிவரை*
*புநர்பூசம் பின்னிரவு 4.26மணிவரை*
*இராகுகாலம் 7.38–9.08மணிவரை*
*சுபநேரம் 12.08–1.38மணிவரை*

| | |
|---|---|
| மேடம் | பிரயாண நன்மை, கூட்டு முயற்சி, சகோதரர் உதவி, தனலாபம். |
| இடபம் | விவாதம், மாதர்நட்பு, மனச்சோர்வு, முயற்சி தாமதம். |
| மிதுனம் | சிந்தனை மிகுதி, சத்துரு ஜெயம், உடல் நலம், புதிய முயற்சி. |
| கடகம் | காரிய அலைச்சல், ரோக நிலை, பேராசை, தனவிரயம். |
| சிங்கம் | பெருமையடைதல், இஷ்ட சித்தி, பொருள் சேர்க்கை, சகோதரர் உதவி. |
| கன்னி | நல்லசெய்தி, புதிய திருப்பம், அதிகாரம், தொழில்நன்மை. |
| துலாம் | கட்டுப்படுத்தல், தந்தைவழிஉறவு, பிரயாணம், வீண்பயம். |
| விருச்சிகம் | எதிர்பாராத பிரச்சினை, காரிய தடங்கல், பணக்குறைவு, மரியாதைக் குறைவு. |
| தனுசு | சௌக்கியவிருத்தி, களஸ்திர நன்மை, செல்வாக்கு, காரிய சித்தி. |
| மகரம் | மனமகிழ்ச்சி, சத்துரு ஜெயம், போசன சுகம், நோய் குணமடைதல். |
| கும்பம் | கௌரவக்குறைவு, செய்தொழில் விருத்தி, நோய்குணமடைதல். |
| மீனம் | உடல் நலக்குறைவு, மனப்பயம், முயற்சி தாமதம், பணவிரயம். |

வளவன்

# சிறந்த விவசாயிகளை கௌரவிக்கும் வைபவம்

யாழ்.விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வேலணை விவசாய போதனாசிரியர் பிரிவில் சிறந்த விவசாயிகளை கௌர விக்கும் வைபவம் இன்று திங்கட் கிழமை முற்பகல் 10 மணிக்கு புளியங்கூடல் மகமாரி அம்மன் இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் வேலணை விவசாயப் போதனாசிரியர் செ. இராமநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் க.ஸ்ரீமோகனன், சிறப்பு விருந்தினர்களாக யாழ். பிரதி விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார், வேலணைப் பிரதேச செயலாளர் மு.நந்தகோபாலன், இலங்கை வங்கி ஊர்காவற்றுறை கிளை முகாமையாளர் கு.சிவஞானசுந்தரம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவ்விழாவில் விவசாயிகளுக்குத் தேவை யான தொழில்நுட்ப தகவல்கள் காட்சிப்படுத் தப்படவுள்ளதுடன் அது தொடர்பான துண்டுப் பிரசுரங்களும்,றுவான் இன சோள விதை யும், திஸ்ஸ இனநிலக் கடலை விதையும், ரவி இன குரக்கன் விதையும் விற்பனை செய்யப்படவுள்ளது.

ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்று கௌரவிக்கப்படவுள்ள விவசாயிகளின் பெயர்விபரம் வருமாறு,

1.*சிறந்த நெல் உற்பத்தியாளர்*

பா.பாலஸ்ரீதரன்(வேலணை மேற்கு மத்தி), சி.பாஸ்கரன் (சுரவணை கிழக்கு), சு.தவராசா (வேலணை மேற்கு)

*சிறந்த சேதனப் பண்ணையாளர்*

சோ. கணேசரெத்தினம் (வேலணை மேற்கு),த.கமலாதேவி (வேலணைமேற்கு), வெ. கணபதிப்பிள்ளை (வேலணைமேற்கு)

*சிறந்த சுயவிதைநெல் உற்பத்தியாளர்*

ச.ஆறுமுகராசா (புளியங்கூடல்), க. இரத்தினசிங்கம் (வேலணை மேற்கு), சு. பகீரதன் (சுருவில்).

*சிறந்த ஒருங்கிணைந்த பண்ணையாளர்*

பி.ஜோன் பப்ரிஸ்ட் (நாரந்தனை), இ. சந்திரலேகா (சுரவணை), த.செல்வரத்தினம் (வேலணை மேற்கு).

*சிறந்த பெண் தலைமைத்துவ விவசாயி*

கே.இந்திராணி(நாரந்தனை), நா.நாகேஸ்வரி( சரவணை), சு. உலகநாயகி(வேலணை மேற்கு)

*சிறந்த சோளச் செய்கையாளர்*

சி. கிருபாணந்தர்( சரவணை கிழக்கு), லோ. ஜோசப் இமானு வேல் (கரம்பன்), செ.தில்லை நாதன்(புளியங்கூடல்)

*சிறந்த நிலக்கடலைச் செய்கையாளர்*

நா.ஜெய்குமார் (சரவணை கிழக்கு), இ.ஸ்ரீதரன்(வேலணை மேற்கு மத்தி), பொ. சீவரெட்ணம் (மண்கும்பான்).

*சிறந்த குரக்கன் செய்கையாளர்*

மு.கோணேசபிள்ளை (புளியங் கூடல்), க.ஸ்ரீபாகரன்(சரவணை கிழக்கு), இ.சின்னத் துரை (சரவணை கிழக்கு). (ஓ-4)




## போதை இளைஞர்களால் முன்பள்ளி சேதம்

(தெல்லிப்பளை)

புன்னாலைக்கட்டுவன் வடக்கு கப்பம்புல பாரதி சனசமூக நிலைய முன்பள்ளிகளின் கதவுகள் மற்றும் தளபாடங்கள் மதுபோதையில் வந்த இளைஞர்கள் சிலரால் கோடரி கொண்டு கொத்தியும், உடைத்தும் சேதமாக்கப்பட்டுள்ளது.

சேதமாக்கப்பட்ட பொருட்களின் பெறுமதி ரூபா ஒரு இலட்சம் வரையாகும் என நிலையத் தலைவர் இ.மெய்யழகன் தெரிவித்துள்ளார். (ஓ)

## அதிபர்களுக்கான வினைத்திறன் காண் பரீட்சை தொடர்பான தீர்மானங்கள்

(யாழ்ப்பாணம்)

அதிபர்களுக்கான வினைத்திறன் காண் பரீட்சை தொடர்பான கலந்துரையாடல் சனிக்கிழமை உயரப்புலம் குணபாலன் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

பயணஅனுமதி பெறுவதில் உள்ள கஷ்டங்கள், போக்குவரத்துப் பிரச்சினை, கொழும்பில் தங்குவதற்கான பாதுகாப்பு அனுமதிபெறுதல், பாதுகாப்பாக தங்குதல் போன்ற பல விடயங்கள் ஆராயப்பட்டன.

பரீட்சையை யாழ்ப்பாணத்திலும் நடாத்துவதற்கு பரீட்சை ஆணையாளர், சமூகநலத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அரசாங்க அதிபர், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், தமிழ் ஆசிரிய சங்கத்தைச் சார்ந்த சரவணபவன் ஆகியோருக்கும் கடிதங்கள் அனுப்புவதாக தீர்மானிக்கப் பட்டது.

இம் மாதம் 19 ஆம் திகதி புதன்கிழமை கடிதங்கள் அனுப்புவதாகவும் ஒப்பமிடாத அதிபர்கள் 17,18 ஆம் திகதிகளில் உயரப் புலம் குணபாலன் வித்தியாசாலையில் ஒப்பமிடுமாறும் ஏற்பாட்டுக் குழுவினர் கேட்டுக்கொள்கின்றனர். (ஓ)

## சாவ. ஆதார வைத்தியசாலையில் எக்ஸ் -ரே பிரிவை இயக்க நடவடிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ''எக்ஸ்-ரே'' பிரிவை இயக்க சுகாதாரத் திணைக்களத்தால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகிறது.

தற்போது வைத்தியசாலை வளாகத்தில் அமைக்கப்பட்டு வரும் நிர்வாக அலகு கட்டடத்திலேயே "எக்ஸ் -ரே" பிரிவு அமைக்கப்பட்டு வருகிறது.

அடுத்த வருட ஆரம்பத்தில் இப் பிரிவு இயங்க ஆரம்பிக்கும் எனத் தெரிவிக்கப் படுகிறது. அத்துடன் அவசர சிகிச்சைப் பிரிவும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கான கட்டட உப கரணங்களை சர்வதேச லயன்ஸ் கழகத்தினர் வழங்கவுள்ளனர்.

சர்வதேச லயன்ஸ் கழக 308 பி1மாவட்ட ஆளுநரின் வேண்டுகோளுக்கிணங்க சர்வதேச லயன்ஸ் கழகத்தினர் ஒப்புதல் வழங்கியுள்ளனர். (ஓ-29)

## வலிகாமம் மேற்கில் மழைவேண்டி ஆலயங்களில் அபிஷேகங்களும் கொடும்பாவி எரிப்பும்

வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் செய்கை பண்ணப்பட்ட நெற்பயிர்கள் மழையின்மையால் கருகிப் போகும் அபாய நிலையில் காணப்படுகின்றன. பெருமளவான பணத்தைச் செலவிட்டு செய்கை பண்ணப்பட்ட பயிர்கள் அழிவடைந்து விடுமோ என்ற அச்ச நிலையில் விவசாயிகள் ஏக்கத்துடன் காணப் படுகின்றனர்.

மழையை வேண்டி ஆலயங்களில் கும்பம் வைத்து அபிஷேகங்களும் 1008 குடம் நீர் மூலமூர்த்திகளிற்கு ஊற்றியும் பூசை வழிபாடுகளும் ஆங்காங்கு கொடும்பாவி எரிப்பு நிகழ்வுகளும் நடைபெற்று வருகின்றன.

நேற்றுமுன்தினம் வட்டுக்கோட்டை சங்கரத்தைப் பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் வட்டுஇந்து வாலிப சங்கத்தினால் விசேட அபிஷேகமும் அன்னதான நிகழ்வும் நடைபெற்றது. நேற்று நவாலி வெளி வைரவர் ஆலயத்தில் சங்கரத்தை இந்து வாலிப சங்கத்தினரால் விசேட அபிஷேகமும் அன்னதான நிகழ்வும் இடம்பெற்றன.

மேலும், பல்வேறு இடங்களிலும் குறிப்பாக மூளாய், சித்தன்கேணி, வட்டுக்கோட்டை சங்கரத்தை, மாவடி போன்ற இடங்களில் அவ்வூர் மக்களால் மழைவேண்டி கடந்த சில தினங்களாக இரவு வேளைகளில் கொடும்பாவி எரிப்பு நிகழ்வுகளும் இடம்பெற்று வருவதையும் அவதானிக்கக் கூடியதாக வுள்ளது.

இம்முறை பருவமழை காலம் தாழ்த்தி வந்தமையால் நெல் விதைப்பும் காலம் கடந்தே மேற்கொள்ளப்பட்டது. இந்நிலையில் இன்னும்சில தினங்களில் மழை பெய்யத் தவறுமாயின் செய்கை பண்ணப்பட்ட நெற் பயிர்கள் முற்றாகக் கருகிப் போவதோடு இம்முறை நெற் பயிர்ச் செய்கை எதிர்பார்த் பலனைத் தராத விடத்து அரிசியின் விலை பன்மடங்கு அதிகரிக்குமென மக்கள் மிக்க மனவேதனையோடு காணப்படுவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. (ஓ-27)

## விசேட அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

அராலி மேற்கு வட்டுக்கோட்டை எனும் முகவரியைச் சேர்ந்த 0904016060 எனும் இலக்கமுடையபொன்னுத்துரை ஜெகதீஸ்வரி என்பவரின் விசேட அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் சமூகம் தந்து அல்லது தகுந்த ஆதாரங் களைக் காட்டி பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார். (ஓ-6)

## சமூக பாதுகாப்பு ஓய்வூதிய பாஸ் புத்தகங்கள் கிடைத்துள்ளன

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச செயலகச் சமூக சேவைகள் பிரிவில் கடந்த ஜுன் மாதம் வரை சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்தில் இணைத்துக்கொள்ளப்பட்டவர்களில் 423 பேருக்கான தவணைப் பாஸ் புத்தகங்கள் பிரதேச செயலகத்துக்கு கிடைத்துள்ளதாகவும், இக்காலப் பகுதிக்கு முன் இத் திட்டத்தில் இணைந்தவர்கள் பணம் செலுத்திய பற்றுச் சீட்டுடன் நாளை செவ்வாய்க்கிழமை பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுக்கு சமூகமளிக்குமாறும் பிரதேச செயலாளர் செ. ஸ்ரீநிவாசன் கேட்டுக் கொள்கிறார். (ஓ-29)

## ஜெயஸ்ரீ பரிசூதிய சீட்டிழுப்பின் வெற்றியாளர்களுக்கான பரிசில்கள்

(சாவகச்சேரி)

மக்கள் வங்கி ஜெயஸ்ரீ பரிசூதிய சேமிப்புத் திட்டச் சீட்டிழுப்பில் சாவகச்சேரி மக்கள் வங்கியில் கணக்கு வைத்துள்ள அல்லாரையைச் சேர்ந்த ஒருவருக்கு குளிர்சாதனப் பெட்டியும் மூவருக்கு டி.வி.டி.பிளேயரும் கிடைத்துள்ளன.

இக் கணக்கில் அதிக தொகை வைப்பிலிட்ட மாணவிக்கு சைக்கிள் ஒன்றும் கிடைத்துள்ளது.

பரிசுப்பொருட்கள் நாளை செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணிக்கு மக்கள் வங்கியில் வட வீலய உதவிப் பொது முகாமையாளர் க.ஆனந்தராசாவினால் வழங்கப்பட உள்ளதாக சாவகச்சேரி மக்கள் வங்கி முகாமையாளர் க.சண்முகலிங்கம் தெரிவித்துள்ளார். (ஓ-29)

## அங்கத்தவர் கௌரவிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தில் அங்கத்துவம் பெற்று 25 வருடங்களைப் பூர்த்தி செய்த அங்கத்தவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

அடுத்த வருடம் மார்ச் மாதம் நடைபெறவுள்ள மன்றத்தின் 30 ஆம் வருட பொதுக் கூட்டத்தில் இவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

25வருடம் பூர்த்தி செய்த அங்கத்தவர்களை மன்றத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-29)



நேற்று முன்தினம் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற புறநிலைப் படிப்புகள் அலகில் பெண்களும் மேம்பாடும் என்னும் கற்கைநெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களிற்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் புறநிலைப் படிப்புகள் அலகின் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன், அரசறிவியற் துறை சிரேஸ்ட விரிவுரையாளர் கே.ரி.கணேசலிங்கம், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் உரையாற்றுவதையும், கற்கைநெறியைப் பூர்த்தி செய்த மாணவ, மாணவிகளிற்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழகப் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் சான்றிதழ் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:கோபி)

# நோத்முதல் கோபல்லவா வரை 155



**சேர்.பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் (16.4.1851 -26.11.1930)**

சட்டசபையில் இராமநாதனுடைய பேச்சுக்குத் தனிமதிப்பிருந்தது. ஐரோப்பியர் தமது ஓய்வுநேரங்களில் அவருடைய ஆற்றொழுக்குப் போன்ற பேச்சை வெகுவாக இரசிப்பது வழக்கம். ஐரோப்பிய அங்கத்தவரான கிறிஸ்ரி என்பாருடன் இராமநாதன் விவாதிப்பது பெரிய இலக்கிய விருந்தாக இருந்ததென்பர். அவர் இறைசேரித் தலைவன் ஓபிரயினுடன் சொற்போர் தொடுத்ததை அறிந்த ஆங்கிலேயர் அவரை உத்தியோகப் பற்றற்ற பிரதிநிதிகளின் ஒப்பு யர்வற்ற தலைவன் எனப் பாராட்டிப் புகழ்ந் துள்ளார்கள்.

சேர்.கிளிபேட் என்பார் குடியேற்றச் செயலாளராயிருந்த காலத்தில் இலங்கையில் தவறணைகளை நிறுவி, வருமானத்தை அதிகரிக்க முயன்றார். அதனை எதிர்த்த இராமநாதன் தமது வழக்கமான கண்டனக் குரலில் செயலாளரை ஒன்றன்பின் ஒன்றாகப் பல கேள்விகளும் விளக்கங்களும் கேட்டார். தவறணைகள் எந்த எந்த மாவட்டங்களிலும் எந்த எந்த ஊர்களிலும் நிறுவப்படும் என்பது அவருடைய கேள்விகளில் ஒன்று. அதற்கு விடை கூறுவதற்கு கிளிபோட் தயங்கியபோது இராமநாதன், "என் நண்பர் இதற்கு விடை கூறத் தயங்குவதைக் காண எனக்குத்திகைப்பாக விருக்கிறது. அரசாங்கத்தின் குரல் எனவும், மதுபரிபாலனத் திருத்தத்துக்குப் பொறுப்பாளி என்றும், இலங்கைக்கு நன்மைசெய்யும் அரசாங்கத்தைக் கொண்டு நடத்துபவர் என்றும் பெயர் பெற்ற இவர் தவறணைகளை நிறுவப்போகும் இடங்கள் அறியாமல் இருப்பது விந்தை

**மீள் பார்வை**

யாக இருக்கிறது" என்று கூறினார்.

இராமநாதன் சட்டசபையிலிருந்து இலங்கையருக்காகச் செய்து நிறைவேற்றிய அலுவல்கள் அளப்பரியவை. அவை சாதி, சமய,மொழிவேறுபாடு கருதாமல் இலங்கை வாழ் பொதுமக்களுக்குச் சேவை என்ற மனோபாவத்துடனே செய்யப்பட்டவையாகும். அவர் கொண்டுவந்த மாற்றங்கள், கட்டளைச் சட்டங்கள் என்பனவும் பிறவும் மாற்றியமைக்கப்பட்டமை மிகவும் அரிதாகவே உள்ளன. நீதிமன்றங்களில் திருத்தங்கள், பதிவுகள், ஆளுரிமைப் பதிவுகள், தபாற் கந்தோர் சேமிப்பு வசதிகள் ஆகியவும் பிறவும் இராமநாதன் ஆரம்பத்திற் செய்த சேவையின் பாற்படும். இவை எல்லாவற்றுக்கும் மேலாக இலங்கைச் சட்டங்களின் கோவைத் தொகுப்பினாலேயே இராமநாதனின் விவேகம் அதிகமாக விளங்குகின்றது. சேர்.யோன்பியர் தலைமையிற் கூடிய சட்டத்தொகுப்புக் குழுவில் சேர் சமுவல் கிறனியர், வான் லங்கன் பர்க் ஆகியோரிலும் பார்க்க இராமநாதனின் முயற்சியே அதிகம் என்பர்.

இராமநாதன் சட்டசபை அங்கத்தவராய் இருந்து சேவை செய்த காலத்தில் ஆள்பதிகளுக்கு அரசியல் அலுவல்களின் அந்தரங்க ஆலோசனைகள் கூறிவந்த பிரடறிக் டோன் ஹொஸ்ற் என்னும் ஆங்கிலேயர் இராமநாதனின் அங்கத்துவ மேன்மையை நன்கு பாராட்டி, அவரைப்போன்ற பிரதிநிதி ஒருவரை ஆசியாக் கண்டத்தில் காணவியலாது என்று எழுதியுள்ளார்.

இராமநாதன் 1879 ஆம்ஆண்டு தொடக்கம் 1892 ஆம் ஆண்டுவரை தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதியாயிருந்து இளைப் பாற நேர்ந்த போது, அவருடைய அளப்பரும் அறிவாற்றலை இழக்கவிரும்பாத குடி யேற்ற மந்திரியார் றிப்பன் பிரபு இராம நாதனைச் சட்ட அறிஞர் நாயகமாக நியமித் தார்.

அதனால் சட்டசபையில் அவருக்குப் பாராட்டுரை வழங்கப்பட்டபோது, இராமநாதன் இலங்கையின் பிரகாசமான ஒளி விளக்கு என்றும், அவரிடம் காணப்பட்ட நல்லியல்புகள் வேறெவரிடத்துங் காணப்படாதவை என்றும், அவருடைய புத்திக்கூர்மையையும் ஆராய்ச்சித் திறனையும் தாம் வெகுவாகப் பாராட்டுவதாகவும் ஆள்பதி அவர்கள் கூறினார்.

கண்டிச் சிங்களவர் பிரதிநிதியாய ரி.வி. பாணபொக்கே, இராமநாதன் தங்களுக்கெல்லாம் வழிகாட்டி என்றும், தாங்கள் அவரையே பின்பற்றிச் சேவை செய்வதாகவும் கூறினார்.

**க.சி.குலரத்தினம்**

இராமநாதன் 14.12.1892 தொடக்கம் சட்ட அறிஞர் நாயகமாகக் கடமையாற்றிய காலத்திலே 3.5.1894 தொடக்கம் ஒரு வருடத்துக்கு அதிகமாகவும் 8.5.1896 தொடக்கம் நான்கு மாதங்களுக்கும், 21.3.1897 தொடக்கம் ஆறுமாதங்களுக்கும் சட்டத்துறை நாயகமாகப் பதில் கடமையாற்றியுள்ளார். அச் சேவையை ஆள்பதி வெகுவாகப் பாராட்டிப் பேசியுள்ளார்.

(தொடரும்)




தெல்லிப்பளை கட்டுவன்புலம் மகாவித்தியாலய நிறுவுனர் தினம் மற்றும் பரிசளிப்பு விழாவின்போது இடம்பெற்ற மாணவரின் கலைநிகழ்வு ஒன்றைப் படத்தில் காணலாம்.

## புதிய அதிபராக பொறுப்பேற்றுள்ளார்


தம்பாட்டி அ.த.க.வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றிய க.சுந்தரலிங்கம் காரைநகர் வியாவில் சைவ வித்தியாலய அதிபராக இடமாற்றம் பெற்று இம்மாதம் 10 ஆம் திகதி கடமையைப் பொறுப்பேற்றுள்ளார் என முன்னாள் வியாவில் சைவ வித்தியாலய அதிபர் எம். தவராசா அறிவித்துள்ளார்.

அதிபர் க.சுந்தரலிங்கம் 1979 இல் இரத்தினபுரியில் ஆசிரியராக நியமனப் பெற்று பின்னர் 1984 இல் இருந்து மார்ச் 1997 வரை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் ஆசிரியராகவும் மார்ச் 1997 முதல் இம் மாதம் 9 ஆம் திகதி வரை தம்பாட்டி அ.த.க. வித்தியாலயத்தில் அதிபராகவும் கடமையாற்றியுள்ளது குறிப்பிடத்தக்கது. (ஓ)


## மீசாலை திருட்டுச் சம்பவத்தின் சந்தேக நபர் விளக்கமறியலில்

மீசாலை வங்களா வீதியில் கடந்த 4ஆம் திகதி இடம்பெற்ற திருட்டுச் சம்பவத்துடன் தொடர்பு உடையவரென சந்தேகிக்கப்படும் இளைஞர் சாவகச்சேரிப் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள் ளார்.

இந்த இளைஞரை பொலிசார் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்த போது சந்தேகநபரை இம் மாதம் 24ஆம்திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதவான் உத்தரவிட்டார். இவர் அரியாலைப் பகுதியைச் சேர்ந்தவரென தெரிவிக்கப்படுகிறது. (ஓ-29)




கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட வறுமைக் கோட்டுக்கு கீழ்பட்ட பயனாளிகளுக்கான சுயதொழில் உதவித்திட்ட கொடுப்பனவு சமூகசேவைகள் அமைச்சின் யாழ். மாவட்ட மக்கள் தொடர்பு அதிகாரி சில்வேஸ்திரி அலன்ரினால் (உதயன்) ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். பணிமனையில் வைத்து வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் பயனாளி ஒருவருக்கு கொடுப்பனவு வழங்கப்படுவதைப் படத்தில் காணலாம்.



யாழ்ப்பாணப் பிரதேச செயலகப் பிரிவின் யாழ்.நகர் கிழக்கு வலயத்தில் சமுர்த்தி வாழ்வாதார அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் தெரிவான பயனுகரிகளுடன் மகாசங்கக் கருத்திட்ட முகாமையாளர் வி.ஜெயசோதி மற்றும் வலய உதவி முகாமையாளர் அ.சிறிஜெகன் ஆகியோர் காணப்படுகின்றனர்.



அகில இலங்கை பாடசாலைகள் பூப்பந்தாட்ட சங்கத்தினால் வட மாகாண பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற பூப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் பதக்கம் வென்ற உடுவில் மகளிர் கல்லூரி வீராங்கனை செல்வி மகிழேந்திக்கு கல்லூரி அதிபர் திருமதி ஹிராணி மில்ஸ் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். (படம்:-கோபி)




நல்லூர் கந்தசுவாமி ஆலய மஹோற்சவத்தின் போது இளங் கலைஞர் மன்றம் நடாத்திய தெய்வீக இசையரங்கில் இசைவாருதி திருமதி வாஸஸ்பதி ரஜீவன், திருமுறை இசைவல்லார் செல்வி ஜனனி நல்லைநாதன் ஆகியோர் இன்னிசைக் கச்சேரி செய்வதையும், அணிசெய் இசைக் கலைஞர்களாக யாழ். பல்கலைக் கழக இசைத்துறை தலைவி செல்வி பாக்கியலெட்சுமி நடராஜா வயலின் வாசிப்பதையும், சதாவேல்மாறன் இசைக் குழுவினர் மிருதங்கம், தபேலா, மோர்சிங் வாசிப்பதையும் படத்தில் காணலாம்.





வலி தெற்கு பிரதேச செயலக சிறுவர் தின நிகழ்வில் உதவிப் பிரதேச செயலர் இ. சோதிநாதன் மங்கல விளக்கேற்றுவதையும், கியூடெக் -கரித்தாஸ் திட்டமிடல் பணிப்பாளர் க.அஜந்தன் சிறுமி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் படத்தில் காணலாம்.

# வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு
# ஆய்வு அபிவிருத்திப் பிரிவு

## க.பொ.த. சாதாரண பரீட்சை 2008 - பயிற்சி வினாத்தாள்- புவியியல் - I

பகுதி I நேரம்:- 1மணி

**சரியான விடையின் கீழ் கோடிடுக.**

01) ஞாயிற்றுத் தொகுதியில் உள்ள கோள்களுடன் ஒப்பிடும் போது புவிக்குரிய சிறப்பான பண்பு.
1.கற்கோளம் 2.நீர்க்கோளம்
3.உயிர்க்கோளம் 4.வளிக்கோளம்.

2) வளிமண்டலத்தில் உள்ள பிரதான வாயுக்களில் 78%,21% என்பவற்றைக் கொண்டுள்ளன முறையே.
1.நைதரசன்,ஒட்சிசன் 2. ஐதரசன்,ஒட்சிசன்
3. நைதரசன்,ஐதரசன் 4. நைதரசன்,காபனீரொட்சைட்

3) புவியோட்டின் தகடுகளை அசைப்பவை.
1.புவியின் புற விசைகள் 2.புவியின் ஈர்ப்பு விசை
3.சமுத்திர நீரோட்டங்கள் 4.புவியின் அகவிசைகள்

4) புவிநடுக்கத்தின் அதிர்வை அளக்கப் பயன்படும் அளவுத் திட்டம்.
1. போபோர்ட் 2.றிச்டர் 3.பாரமானி 4.டொப்சன்

5) அனற்றோலியன் பீட பூமி அமைந்துள்ள நாடு.
1.ஸ்பெயின் 2.பிரான்ஸ் 3.கிரேக்கம் 4.துருக்கி

6) இலங்கை எவ்வகை கால நிலை பிரதேசத்தினுள் உள்ளடங்குகின்றது.
1.முனைவுக்காலநிலை 2.இடைவெப்ப கால நிலை
3. குளிர்கால நிலை 4.அயனமண்டலகாலநிலை

7) வடஅமெரிக்கா ,அவுஸ்திரேலியா ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள புல்வெளிகள் முறையே எவை
1.பிறேயறிஸ்,வெல்ட் 2.பிறேயறிஸ்,டவுன்ஸ்
3.பம்பாஸ்,வெல்ட் 4.பம்பாஸ்,டவுன்ஸ்

8) இலங்கையின் தாழ்நிலை ஈரவலயப் பிரதேசம் அதிக மழை வீழ்ச்சியைப் பெற்றுக் கொள்ளும் காலப்பகுதி
1.டிசம்பர், பெப்ரவரி 2.ஒக்டோபர், டிசம்பர்
3.மே,செப்ரெம்பர் 4.மார்ச்,ஏப்ரல்

9) புதுப்பிக்கக்கூடிய வளங்களுள் உள்ளடங்குவன எவை.
1.பெற்றோலியம்,நிலக்கரி, கடலலை
2.சூரியசக்தி,காற்று, கடலலை
3.சூரியசக்தி,காற்று, இயற்கை வாயு
4.பெற்றோலியம், நிலக்கரி,காற்று

10) தீப்பாறைகளை மட்டும் பின்வருவனவற்றுள் உள்ளடங்கிய விடை
1.கருங்கல்,பெல்சைட், தயோரைட்
2.கருங்கல், பெல்சைட், மார்க்கல்
3.கருங்கல்,மணற்கல்,சலவைக்கல்
4.பெல்சைட்,நிலக்கரி, டொலமைற்

11) ஊசியிலைக் காடுகளில்காணப்படும் இயற்கைத் தாவரங்களைக் கொண்டுள்ள விடை
1.மகோகனி, தேக்கு, வேம்பு 2.நதுரன்,செஸ்நட்,லாச்
3.ஒக்,பீச்,செஸ்நட் 4.ஸ்புருஸ்,லாச்,பேர்ச்

12) இலங்கையில் காணப்படும் தொல்காலப் பாறைகள் உருவாகிய காலமாக அமைவது எது
1.மயோசின் காலம் 2.யூராசிக் காலம்
3.பிறிக்கேம்பிரியன் காலம் 4. கிறிற்றோசியஸ் காலம்

13)இலங்கையின் முத்துராஜவெல பிரதேசத்தில் கண்டறியப் பட்டுள்ள கனிப்பொருள் வளம்.
1. இரும்புத்தாது 2.பெற்றோலியம்
3.இரத்தினக்கல் 4.முற்றா நிலக்கரி

14) இலங்கையின் உலர் வலயப் பிரதேசத்தில் காணப்படும் பிரதான மண்வகை
1.செம்மஞ்சள்பொட்சோலிக் 2.செங்கபில மண்
3.செங்கபில லற்றோசோலிக் 4.வண்டல்மண்

15) இலங்கையில் இன்று பேணிப் பாதுகாக்கப்படும் காடுகளின் சதவீதம் யாது
1. 18% 2. 22% 3. 26% 4. 30%

16) உலகில் மிக ஆழமான கடல் அகழி
1.யப்பான் அகழி 2.யாவா அகழி
3.மரியானா அகழி 4.மிண்டேனா அகழி

17) இலங்கையில் எப்பாவெல பிரதேசத்தில் காணப்படும் கனியவளம் எது
1.அப்பதைற்று 2.இரத்தினக்கல் 3.சிலிக்கா 4.இல்மனைற்

18) புவி வெப்பமடைவதற்கு காரணமான பிரதான வாயு
1.நைதரசன் ஒட்சைட் 2.காபனீரொட்சைட்
3.கந்தகவீரொட்சைட் 4.ஐதரசனொட்சைட்

19) உலக மொத்தச் சனத்தொகையின் வீதத்தில் முதல் இரண்டாம் நிலையை பெறும் கண்டங்கள் முறையே.
1.ஆசியா,ஆபிரிக்கா 2.ஆசியா,வட அமெரிக்கா
3.ஆசியா,ஐரோப்பா 4.ஆசியா,தென் அமெரிக்கா

20) இலங்கை 21ஆம் நூற்றாண்டில் எதிர்நோக்கும் குடித்தொகை சார்ந்த சவால்.
1.உழைப்போர் பற்றாக்குறை
2.தங்கியிருக்கும் சிறுவர் வீதாசாரம் குறைவடைதல்
3.தங்கியிருக்கும் சிறுவர் வீதாசாரம் அதிகரித்தல்
4.தங்கியிருக்கும் முதியோர் வீதாசாரம் அதிகரித்தல்

21) உலகின் மொத்தக் குடித்தொகையில் மாற்றத்தை ஏற்படுத்தும் காரணியாக அமையாதது.
1. பிறப்பு 2. இறப்பு 3. இடப்பெயர்வு 4. கருவளம்

22) இலங்கையில் சனத்தொகை கூடிய மாவட்டம் எது?
1.கம்பஹா 2.கொழும்பு 3.களுத்துறை 4.குருநாகல்

23) இலங்கையில் முதலாவது குடித்தொகை கணிப்பீடு மேற்கொள்ளப் பட்ட ஆண்டு
1. கி.பி1841 2.கி.பி1791 3.கி.பி1871 4.கி.பி1891

24) உலகின் விவசாயப் பாகுபாட்டை மேற்கொண்டவர்
1.டாங்வென்ற் விட்டல்சி 2.அன்டர்சன்
3.D.B.கிறிக் 4.தோன்வைற்

25) செறிவான பிழைப்பூதிய பயிர்ச்செய்கையில் உள்ளடங்கும் பயிர்
1.சோளம் 2.கோதுமை 3.நெல் 4.கரும்பு

26) எக்ஸ்ரென்சியா (Extensia) என அழைக்கப்படுவது
1.அவுஸ்திரேலியாவின் விலங்குப் பண்ணை
2.தென்அமெரிக்காவின் விலங்குப் பண்ணை
3.கனடாவின் விலங்குப் பண்ணை
4.டென்மார்க்கின் விலங்குப் பண்ணை

27) வட ,தென் அரைக்கோளங்களில் $30^0$-$45^0$ அகலக்கோடுகளுக்கிடையில் முதன்மை பெறும் பயிர்ச்செய்கை.
1.பெருந்தோட்ட விவசாயம் 2.நெற்பயிர்ச்செய்கை
3.மத்தியதரை விவசாயம் 4.கலப்பு வேளாண்மை

28) வட மகாணம் உள்ளடக்கியுள்ள மாவட்டங்களின் எண்ணிக்கை
1.4 2.5 3.6 4.7

29) இரண்டு மாநகரங்களை இணைக்கும் பிரதான வீதிகளின் இரு மருங்கிலும் காணப்படும் குடியிருப்பு வகை.
1.சிதறல் குடியிருப்பு 2.கொத்தணிக் குடியிருப்பு
3.நேர்க்கோட்டுக் குடியிருப்பு 4.சந்திக் குடியிருப்பு

30) மில்லியன் நகரங்களின் சராசரி குடித்தொகையானது.
1.20000-100 000 பேர் 2.100 000-1000 000 பேர்
3.1000 000-1500 000 பேர் 4.1500 000 மேல்

31) உலகில் சேவை நகரத்திற்கு சிறந்த உதாரணமாக அமைவது
1.புது டெல்லி 2.ரோம் 3.சிங்கப்பூர் 4.சிட்னி

32) சர்வதேச குடித்தொகை தினம் ஒவ்வொரு ஆண்டிலும் கொண்டாடப்படுவது.
1.யூன் 5 2.யூன் 11 3.யூலை 11 4.யூன் 8

33) இலங்கையில் இறப்பர் ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம்.
1.லுனுவில 2.தலாவாக்கொல்லை
3.பத்தல கொட 4.அகலவத்தை

34) மன்னார், புத்தளம் , அம்பாந்தோட்டை பிரதேசங்களில் உற்பத்தி செய்யப்படும் பிரதான சிறுஏற்றுமதிப்பயிர்
1.மரமுந்திரிகை 2.அன்னாசி
3.கறுவா 4.வாசனைப்பொருட்கள்

35) மோட்டார் வாகனக் கைத்தொழில் முதலிடம் பெறும் உற்பத்திக் கம்பனி
1. ஹொண்டா 2. வொக்ஸ்லாகன்
3. டொயோட்டா 4. ஜெறைக்மோட்டார்

36) உலகில் கப்பல் கட்டும் கைத்தொழிலில் உலகில் முதலிடம் பெறும் நாடு.
1. ஐக்கிய அமெரிக்கா 2. யப்பான்
3. ஐக்கிய இராச்சியம் 4. பிரான்ஸ்

37) இலங்கையில் தொலைக்காட்சி சேவை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு
1. 1969 2.1974 3.1979 4.1984

38) மயோரின் எனப்படும் பழங்குடிகள் அதிகம் வாழும் கண்டம்
1. அவுஸ்திரேலியா 2.வ்டஅமெரிக்கா
3. தென்அமெரிக்கா 4.ஆபிரிக்கா

39) ஐக்கிய நாடுகள் சபை 2008ஆம் ஆண்டை எவ்வாண்டாகப்பிர கடனப்படுத்தியுள்ளது.
1.சர்வதேச நீர் ஆண்டாக
2.சர்வதேச வானியல் சாஸ்திர ஆண்டாக
3.சர்வதேச ஓசோன் ஆண்டாக
4.சர்வதேச அரிசி ஆண்டாக

40) சுதந்திர நாடாக 2008 இல் பிரகடனப்படுத்தப்பட்ட நாடு.
1. மொன்டிநெக்ரோ 2. பாலித்தீவு 3. சேர்பியா 4. கொசோவா

# வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள்-2009

## தொடர்ச்சி...

vi.ஏதேனும் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் பெறுமதி , அப் பொருள் இறக்குமதி செய்யப்படுவதற்கு முன்னர் சுங் கப்பணிப்பாளர் நாயகம் திருப்தியடையும் வகையில் திருத்த வேலைகளுக்காக இலங் கைக்கு வெளியே எடுத்துச்செல்லப்படுதல்.

vii.இலங்கையில் தயாரிக்கப்பட்ட ஏதேனும் திரைப்படச்சுருள் அல்லது தொலைக் காட்சி நாடகம் தேசிய திரைப்படக்கூட்டுத் தாபனத்தின் அங்கீகாரத்துடன் மேலதிகத் தயாரிப்பிற்காக அல்லது அச்சிடுவதற்காக இலங்கைக்கு வெளியே அனுப்பப்பட்டால் அதன் பெறுமதி .

viii. விமானம் மூலம் அல்லது கப்பற் சேவை கம்பனிகள் மூலம் இறக்குமதி செய்யப்பட்ட ஏதேனும் உதிரிப் பாகத்தின் பெறுமதி, அத்தகைய உதிரிப்பாகங்கள் ஏதேனும் விமானதிற்கு அல்லது கப்பலுக்கு அத்தகைய விமானம் அல்லது கப்பல் கம்பனியினால் சர்வதேச போக்குவரத் திற்காகச் சொந்தமாக வைக்கப்பட்டுள்ள அல்லது வாடகைக்கு அமர்த்தப்பட்ட கப்பல் களுக்காகப் பயன்படுத்துவது என சுங்கப் பணிப்பாளர் நாயகம் திருப்திப்படும் பொருட்கள்.

ix.ஏதேனும் பொரு ட்களின் விற்பனையிலிருந்து பெறுகைகள் அல்லது ஐக்கிய நாடுகள் அமைப்புக்களின் ஏதேனும் சேவைகளின் ஏற்பாடுகள் தொடர்பாக பெறப்பட்ட தொகை அல்லது பெறுகைகள் அல்லது அத்தகைய நிறுவனங்களின் ஏதேனும் முகவராண்மைகள் அல்லது ஏதேனும் வெளிநாட்டு அரசாங்கத்தின் இராஜதந்திர தூதுவராலயங்கள் அல்லது அத்தகைய தூதுவராலயங்களின் அலுவலர்கள் அல்லது இராஜதந்திர அந் தஸ்தில் உள்ள வெளிநாட்டு அமைச்சரி னால் பரிந்துரைக்கப்பட்டதன் பேரில் அமைச்சரி னால் அங்கீகரிக்கப்பட்ட எவரேனும் பிற ஆட்கள் என்பவர்களிட மிருந்து ஏதேனும் பொருட்களின் விபனையில் இருந்து பெறுக்கைகள் அல்லது பெறப்பட்டவைகள்.

x. அத்தகைய நபர்களிடமிருந்து பெறப்பட்ட ஏதேனும் தொகை அல்லது பெறுகைகள். பின்வரும் சேவைகள் ஒன்று அல்லது பல வற்றின் ஏற்பாடுகள்.

அ) வங்கித் தொழில் அல்லது நிதி மற்றும் காப்புறுதி வியாபாரமொன்றினைக் கொண்டு நடாத்துதல்.

ஆ) மின் வழங்கல் .

இ மருத்துவ சேவைகள்.

ஈ) நீர் வழங்கல் .

உ)பொருட்கள் அல்லது பயணிகள் போக்குவரத்து.

ஊ) ஏதேனும் கட்டிடம், பாதை, பாலம், நீர் வழங்கல், வடிகாலமைப்பு அல்லது கழிவு நீர் முறைமை துறைமுகம், விமான நிலையம் அல்லது தொலைத்தொடர்பாடல் அல்லது மின்சாரத்தில் ஏதேனும் உட் கட்டமைப்புக் கருத்திட்டம் போன்ற நிர்மாணங்கள் தொடர்பில் நிர்மாண ஒப்பந்தச் சேவைகள்.

எ) ஏதேனும் பொருட்களின் ஏற்றுமதிக்காக வழங்கப்பட்ட ஏதேனும் சேவை அச்சேவைகள் அத்தகைய பொருட்களின் தரத்தினை அல்லது இயல்பினை மேம்படுத்துவதுடன் நேரடியாகத் தொடர்புபட்டதாக இருத்தல்.

ஏ) ஏதேனும் ஆடைத் தொழில் ஏற்றுமதியாளரினால் வழங்கப்படும் தைத்த ஆடைகளின் சேவைகள்

ஐ) 1972 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உரிமம் பெற்ற கப்பற்தொழில் முகவராண்மைச் சட் டத்தின் கீழ் அனுமதிப்பத்திரம் பெற்ற கப்பற் தொழில் முகவர் , கப்பல் சரக் கேற்றல் சேவைகள் அல்லது இலங்கையிலிருந்து ஏதேனும் பொருளை ஏற்றுமதி செய்வது தொடர்பில் வழங்கப்படும் அத் தகைய சேவைகள்.

ஒ) இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் ஏதேனும் பொரு ட்கள் தொடர்பில் அத் தகைய சேவைகளைக்கொண்ட அர சாங் கக் கூட்டுத்தாபனம் ஒன்றினால் வழங்கப் பட்ட சேவைகள்.

ஓ ஹோட்டல், வாடி வீடுகள், விடுதிகள், உணவுச் சாலைகள் போன்ற பிற வியாபாரங் களைச் செயற்படுத்துகையில் அத்தகைய



ஹோட்டல் , வாடி வீடுகள் ,விடுதிகள் மற்றும் பிற வியாபாரங்கள் 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டத் தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருத்தல்.

ஔ) ஏல விற்பனையாளர், தரகர் , காப்புறுதி முகவர் அல்லது ஏதேனும் உள்ளூர் உற் பத்தி யொன்றின் தரகு முகவர் ஒருவரின் சேவைகள்.

க) இலங்கை சுற்றுலாச் சபையுடன் பதிவு செய்துள்ள ஆளொரு வரின் உள்ளகச் சுற்றுலாக்கள் தொடர்பில் சுற்றுலா முகவர் ஒருவரின் சேவைகள்.

கா) முழுமையாக இலங்கைக்கு வெளியே பயன்படுத்துவதற்காக அத்தகைய ஆளொருவரினால் உருவாக்கப்பட்ட மென்பொருள் தொடர்பில் கணனி மென்பொருள் அபிவிருத்திச் சேவைகளும் வங்கியொன்றின் ஊடாக அதற்கான வெளிநாட்டுச் செலவாணியில் கொடுப்பனவுப் பெறுகைகளும் (2001 மார்ச் 08 ஆம் திகதியிலிருந்து பயன் வலுப் பெறுவது)

கி) பொருட்கள் விற்பனை அல்லது சேவைகளின் ஏற்பாடுகள் என்பவற்றுக்கு வசதியளித்தல் அல்லது அத்தகைய சேவைகளை வழங்குவதற்கு தொழல் முயற்சியொன்றினால் முடியுமாக இருத்தல்.

இணையத் தளம் மற்றும் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட மென்பொருள் மீதான சேவை வழங்கல் இல ங்கையிலுள் ளஒருவரிடமிருந்து இலங் கைக்கு வெளியேயுள்ள ஒருவருக்கு வெளி நாட்டு செலவாணியில் கொடுப்பனவு செய்தல்.

கீ) இணையத்தளம் அல்லது தொலைபேசி ஒன்றின் ஊடாக தொழில் முயற்சி யொன்றினால் வழங்கப்பட்ட வாடிக்கையாளர் ஒத்துழைப்புச் சேவைகள் குறிப்பாக அத்தகைய சேவைகள் இலங்கைக்கு வெளியேயுள்ள இனங்காணப்பட்ட ஒன்று அல்லது அதிகமான வாடிக்கையாளர்களுக்கு வெளிநாட்டு நாணய த்தில் கொடுப்பனவு செய்தல்.

xi.ஏதேனும் காப்புறுதி வியாபாரமொன்றினை மேற்கொள்ளும் அத்தகைய ஆட்களின் முகப்பெறுமான ஆயுட் காப்புறுதி .

xii.இறக்குமதி செய்யப்பட்ட ஏதேனும் பொருட்களின் கப்பலேற்றல் பெறுமதி அத்தகைய பொருட்கள் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் கீழ் வரி அறவிடப்பட்ட பொருட்களாக இருப்பின் அவை.

xiii திரைப் படங்களில் காட்சிப்படுத்துவதற்கு முன்னதான ஏதேனும் திரைப்படசுருள் விநியோகம் அல்ல்து தயாரிப்பு மற்றும் விநியோகம் .

xiv. திரைப்பட மொன்றில் படச்சுருள்களை காட்சிப்படுத்தல்.

xv.பின்வரும் பொருட்களின் விற்பனை யிலிருந்தான பெறுகைகள் அல்லது இறக்குமதியின் போதான பெறுமதி.

அ) உரம்.

ஆ) பெற்றோலியம் மற்றும் பெற்றோலிய உற்பத்திகள்.

இ திரவ பெற்றோலிய வாயு மற்றும் .

ஈ) மருந்துப்பொருட்கள்.

xvi.வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அமைச் சரினால் விடுக்கப்பட்ட கட்டளையினால் குறிப்பீடு செய்யப்பட்ட வேறு பிற.

### 8 .சுங்கத்தீர்வை மாற்றங்கள்

**1) இலங்கையினால் கைச்சாத்திடப்பட்ட சுதந் திரவர்த்தக ஒப்பந்தங்களின் கீழ் தீர்வைத் திருத்தங்கள்.**

இலங்கையினால் கைச்சாத்திடப்பட்ட இருதலைப்பட்ச மற்றும் பிராந்திய சுதந்திர உடன் படிக்கைகளின் கீழ் தெரிவு செய்யப்பட்ட இறக்குமதிகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட விருக்கும் தீர்வைத் திருத்தங்கள் 2008 நவம்பர்07 ஆம் திகதியிலிருந்து பயன் வலுப்பெறும் வகையில் செயற்படுத்தப்படும்.

i) தெற்காசிய சுதந்திர வர்த்தக பிரதேச உடன் படிக்கை (SAFTA ) நியதிகளுக்கு அமைவாக தெற்காசிய நாடுகளின் அபிவிருத்திக்காக 20 சதவீதத்திற்கும் குறைந்த பொதுத் தீர்வை விகிதத்தினைக் கொண்ட பொருட்கள் தொடர்பில் 10 சதவீத பொதுத் தீர்வை விகிதத்திற்கு முன்னுரிமை நிரலொன்றினை வழங்குமாறு இலங்கை கேட்கப்பட்டுள்ளது.

மேலும் தற்பொழுது இருக்கும் பொதுத் தீர்வை விகிதங்களை உடன்படிக்கையில் குறிப் பிட்ட தொடர்புடைய பொருட்களுக்கு அபி விருத்தி குன்றிய நாடுகளுக்காக 30 சதவீத முன்னுரிமை நிரலொன்றாக விலக்களிப்புச் செய்ய வேண்டியுள்ளது.

ii) எஞ்சிய பட்டியலின் நிபந்தனைகளுக்கு அமைவாக முன்னுரிமை நிரலின் மீதி 30 சதவீதத்தினை விலக்களித்தல் (அவ்வாறெனின் முன்னுரிமைத் தீர்வையானது பூச்சியமாகும்) இந்தியா -இலங்கை வர்த்தக உடன்படிக்கை (ISFTA) இன் கீழ். 2008. 03.01 ஆம் திகதியிலிருந்து பயன்வலுப் பெறும் வகையில் செயற்படுத்தப் பட்டுள்ளது.

iii) கட்டுப்படுத்தல் பட்டியலின் நியதிகளுக்கு அமைவாக முன்னுரிமை நிரல் 20 சதவீ தம் விலக்களிக்கப்படுதல் பாகிஸ்தான் இலங்கை சுதந்திர வர்த்தக உடன் படிக்கை (PSFTA) இன் கீழ் 2008.06.12 ஆம் திகதியிலிருந்துபயன்வலுப்பெறும் வகையில் செயற்படுத்தப்பட்டுள்ளது.

**2) பெறுமதி சேர்க்கப்பட்ட வெயின் குவாட்ஸ் மீதான ஏற்றுமதித் தீர்வை**

வெயின் குவாட்ஸ் ஏற்றுமதி தொடர்பில் மெற்றிக் தொன் ஒன்றிற்கான எப்ஓபி பெறுமதி 20 சதவீதத்தினை ஒத்ததாக ஏற்றுமதித் தீர்வையொன்று தற்பொழுது செலுத்தப்பட வேண்டியுள்ளது. வெயின் குவாட்ஸ் மீது உள்ளூர் பெறுமதி சேர்ப்பில் ஈடுபட்டுள்ளவர் களை ஊக்குவிக்கும் வகையில் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு ஏற்று மதித் தீர்வை திருத்தப்படுவதுடன் 2008 நவம்பர். 07 ஆம் திகதியிலிருந்து பயன்வலுப் பெறும் வகையில் செயற்படுத்தப்படும்.

| வெயின் குவாட்ஸிற்கான எப்ஓபி(மெ.தொ) (இசையு முறைக் குறியீடுகள்2506.10) | | ஏற்றுமதி தீர்வை % |
|---|---|---|
| வெயின் குவாட்ஸ் மூலப்பொருள் | 139 வரை | 20 |
| வெயின் குவாட்ஸ் அளவையில் பெறுமதி சேர்ப்பு | 140-190 | 14 |
| வெயின் குவாட்ஸ் அளவையில் பெறுமதி சேர்ப்பு | 191-240 | 09 |
| வெயின் குவாட்ஸ் அளவையில் பெறுமதி சேர்ப்பு | 241-299 | 03 |
| வெயின் குவாட்ஸ் அளவையில் பெறுமதி சேர்ப்பு | 300விஞ்சியது | தீர்வையற்றது |

(தொடரும்)

# கிழக்கு மாகாண முதலமைச்சரின் கன்னி வரவு-செலவுத் திட்டம்



(கொழும்பு)

கிழக்கு மாகாண முதலமைச்சர் பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன், மாகாண சபை யின் கன்னி வரவு-செலவுத்திட்டத்தை நாளை செவ்வாய்க்கிழமை முன்வைக்கவுள்ளார்.

கிழக்கு மாகாணத்தை அரசாங்கப் படைகள் மீட்ட பின்னர் அங்கு பிரிக்கப்பட்ட கிழக்கு மாகாணசபைக்கான தேர்தல் நடத்தப்பட்டது. இந்தத் தேர்தலில் போட்டியிட்ட விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்துசென்ற தமிழ்மக்கள் விடுதலைப்புலிகளின் பிரதித் தலைவர் பிள்ளையான் முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இணைந்த வடக்கு, கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சராக விருந்த வரதராஜப் பெருமாள் 1980 ஆம் ஆண்டு வடக்கு கிழக்கு மாகாண சபையில் முன்வைத்த வரவு-செலவுத்திட்டத்தின் பின்னர் பிள்ளையானே பிரிக்கப்பட்ட கிழக்கு மாகாண சபைக்கான வரவு -செலவுத்திட்டத்தை முன் வைக்கவுள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் மீள்குடியேற்றங்கள் மற்றும் அபிவிருத்திகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளபோதும் போதியளவு நிதி ஒதுக்கப்படவில்லையென பிள்ளையானுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதனால், கையிலிருக்கும் நிதிக்கு ஏற்ப செலவீனங்களைக் குறைத்திருப்பதாக அவர்கள் கூறியுள்ளனர். கிழக்கு மாகாணத்தின் வரவு-செலவுத்திட்டம் மீதான வாக்கெடுப்பு எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. (ஓ-5)

## சகல தேர்தல்களிலும் ஐ.தே.க வே வெற்றிபெறும்


### -எஸ்.பி.திசாநாயக்க

இனிவரும் காலங்களில் நடைபெறும் சகல தேர்தல்களிலும் ஐக்கிய தேசிய கட்சியே வெற்றி பெறும் எனவும் இதனை எவராலும் தடுக்க முடியாது எனவும் ஐக்கிய தேசிய கட்சியின் தேசிய அமைப்பாளர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்துள்ளார். நேற்றுமுன்தினம் மடவல, பாத்ததும்பர பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இந்த கருத்தினை வெளியிட்டார். எதிர்வரும் மத்திய மாகாணசபை தேர்தலின் பொழுது முதலமைச்சருக்கான வேட்பாளராக ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பாக தாம் போட்டியிடவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் யுத்தத்தைக் காரணம் காட்டியே தற்போதையஅரசாங்கம் வெற்றியடைந்ததாகவும் அவர் தமது உரையின் போது தெரிவித்தார். (ஓ)

# வடக்கில் இடம்பெறும் யுத்தம் தொடர்பாக கருத்து வெளியிடக்கூடாது

## சம்பிக்கவுக்கு ஜனாதிபதி உத்தரவு



வடக்கில் இடம்பெற்றுவரும் யுத்தம் தொடர்பாக கருத்து வெளியிடக்கூடாது எனவும், வாயை மூடிக் கொண்டிருக்குமாறும் சுற்றாடல் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவிற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இந்திய தலையீடு,தமிழக அழுத்தங்கள் தொடர்பில் கருத்து வெளியிடுவதனை தவிர்க்குமாறு சம்பிக்கவிற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. தேவையின்றி அரசாங்கத்திற்கு எதிரான கருத்துக்களை வெளியிட்டால் பாரிய பின்விளைவுகளை சந்திக்க நேரிடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாகவே ஜாதிக ஹெல உறுமய கட்சியும் சம்பிக்க ரணவக்கவும் மௌனம் காத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நோர்வே தலையீடு தொடர்பாக உரக்கக் குரல் கொடுத்த ஜாதிக ஹெல உறுமய இந்திய மற்றும் தமிழக தலையீடுகள் குறித்து மௌன நிலையைக் கடைப்பிடிப்பதாக சுட்டிக்காட்டப்படுகிறது. (ஓ)

# கிழக்கு மாகாண சபைக்கு பொலிஸ் அதிகாரங்கள்

(கொழும்பு)

கிழக்கு மாகாணசபைக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதற்கு ஜனாதிபதியின் சிரேஸ்ட ஆலோசகர் பசில் ராஜபக்ஷ இணக்கம் தெரிவித்துள்ளார். கிழக்கு மாகாண சபைக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை உடனடியாக வழங்குமாறு பசில் ராஜபக்ஷவிடம் இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் 13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட வேண்டுமென இந்திய வெளிவிவகார அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்படி, கிழக்கு மாகாணசபைக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரபல சிங்கள வார ஏடொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ஓ)

# இலங்கை பிரச்சினை தொடர்பான அனைத்துக் கட்சிக் கூட்டம்


இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக விவாதிக்க அனைத்துக் கட்சிக் கூட்டத்துக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அழைப்பு விடுத்துள்ளது. இது குறித்து கட்சியின் மாநிலச் செயலர் தா.பாண்டியன் சனிக்கிழமை வெளியிட்ட செய்தி,

இலங்கையில் போர் நிறுத்தம் செய்யப்பட வேண்டும், அமைதி வழியில் தீர்வுக்கு முயற்சிக்க வேண்டும் என்ற தமிழக மக்களின் வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இலங்கைத் தமிழர்களைப் பாதுகாக்க அடுத்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை செய்ய அனைத்துக் கட்சி மற்றும் முக்கிய அமைப்புகளின் கூட்டம் இன்று திங்கட்கிழமை காலை தி.நகரில் உள்ள சாகித்யன் ஹோட்டல் கூட்ட அரங்கில் நடைபெறுகிறது. (ஓ)

# இலங்கையில் பேச்சுவார்த்தை ; இரு தரப்பிலும் நம்பகத்தன்மை இல்லாதநிலையில் எப்படி முடியும்?

## டில்லி நீதிமன்ற முன்னாள் பிரதம நீதியரசர்



(சென்னை)

இலங்கையில் இருதரப்பிலும் அடிப்படை நம்பகத்தன்மை தகர்ந்துள்ளது அப்படியிருக்கையில் எந்த அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்த முடியும் என்று டில்லி உயர்நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி ராஜிந்தர் சச்சார் கேள்வி எழுப்பினார். மக்கள் சிவில் உரிமைக் கழகம் சார்பில் சென்னையில் நடந்த கலந்தாய்வுக் கூட்டத்தில் டில்லி உயர்நீதி மன்ற தலைமை நீதிபதி ராஜிந்தர் சச்சார் பேசியதாவது, கடந்த ஆறு அண்டுகளுக்கு முன் நான் இலங்கை சென்றிருந்த போது நோர்வே உதவியுடன் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருந்தது. விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரனை சந்திப்பதற்காக இலங்கை அரசு ஹெலிகொப்டர் கொடுத்து உதவியது. அந்த அளவுக்கு இரு தரப்பிலும் நம்பகத்தன்மையும் உறவும் இருந்தது.

தற்போது அந்த சூழல் இல்லை. இரு தரப்பிலும் அடிப்படை நம்பகத்தன்மை தகர்ந்துள்ளது. அப்படியிருக்கையில் எந்த அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்த முடியும் மனித உரிமை மீறல் எங்கு நடந்தாலும் அது கண்டிக்கத்தக்கது. அதை என்றும் ஏற்க முடியாது. இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் மீது விமானத் தாக்குதல் நடத்துவது கண்டிக்கத்தக்கது. விடுதலைப் புலிகள் போர் நிறுத்தத்திற்கு சம்மதித்தாலும் இலங்கை அரசு சம்மதிக்க மறுக்கின்றது. இலங்கையில் போர் நிறுத்தம் செய்யப்பட வேண்டும். இலங்கைத் தமிழ்மக்கள் மரியாதையுடனும் உரிமையுடனும் நடத்தப்பட வேண்டும் அவர்களுக்கு பொருளாதார காலசார சுதந்திரம் முழுமையாக வழங்க வேண்டும்.

தமிழ்மக்கள் மட்டுமல்லாது பிற மாநில மக்களும் இலங்கையில் அமைதி ஏற்பட வேண்டும் என்று விரும்புகின்றனர். இலங்கையில் தமிழ் ஈழம் வேண்டுமா வேண்டாமா என்பதை போராட்டக் களத்தில் இல்லாத நாம் தீர்மானிக்கக் கூடாது. அங்கு மனித உரிமைகள் மீறப்படக்கூடாது என்பதை மட்டுமே வலியுறுத்த வேண்டும் இன்றைய சூழலில் தனி நாடு என்று ஒன்று அமைப்பது சுலபமானது அல்ல. அது நடை முறையில் சாத்தியமில்லாதது என்றே கருதுகிறேன் இவ்வாறு ராஜிந்தர் சச்சார் கூறினார். (ஓ)

# இலங்கை இராணுவத்தினரின் மிரட்டலுக்கு அஞ்சி இராமேஸ்வரம் வந்த அகதிகள்

(இராமேஸ்வரம்)

விடுதலைப்புலிகளை பிடிப்பதற்காக இலங்கை இராணுவத்தில் தமிழ் இளைஞர்களை வலுக்கட்டாயமாக சேர்த்து வருவதாக இராமேஸ்வரம் வந்த அகதி தெரிவித்தார்.

இலங்கையில் இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் நடந்து வரும் சண்டை காரணமாக இராமேஸ்வரத்திற்கு தினமும் ஏராளமானோர் அகதிகளாக வந்த வண்ணம் உள்ளனர். இந்தநிலையில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இலங்கை தலை மன்னார் கடற்கரையில் இருந்து ஒரு பிளாஸ்டிக் படகில் 11 குடும்பத்தைச் சேர்ந்த 11ஆண்கள், 7பெண்கள், 5 ஆண்குழந்தைகள்,6 பெண் குழந்தைகள் என மொத்தம் 29பேர் தனுஷ் கோடி அரிச்சல் முனை கடற்கரையில் வந்திறங்கினர்.

அவர்கள் நேற்றுமுன்தினம் காலை தனுஷ் கோடி பொலிஸ்நிலையத்தில் தஞ்சம் அடைந்த அவர்கள் கியூபிரிவு பொலிஸாரின் விசாரணைக்குப் பின்னர் மண்டபம் அகதிகள் முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இதில் அகதியாக வந்த சந்திரகுமார் ( வயது 28) கூறியதாவது,

இலங் கையில் வவுனியா செட்டிகுளம் பகுதியில் வசித்து வந்தோம். அங்கு இராணுவத்தின் கெடுபிடி அதிகமாக உள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன்பு எங்கள் பகுதியில் உள்ள 103 குடும்பங்களை இலங்கை இராணுவத்தினர் 100க்கும் மேற் பட்டோர் சுற்றி வளைத்து அங் குள்ள ஒரு பள்ளிக்கூடத்திற்கு அழைத்துச் சென்றனர். அங்கு விடுதலைப் புலிகளை பார்த்தீர்களா? அவர்களுக்கு உதவி செய்தீர்களா? என்று கேட்டு சித்திரவதை செய்தனர்.

மேலும் தமிழ் இளைஞர்களை இலங்கை இராணுவத்தில் சேரும்படி கட்டாயப்படுத்துகின்றனர். விடுதலைப்புலிகளை பற்றிய தகவல்களை இராணுவத்திற்கு தெரிவிக்க வேண்டும் என்றும், விடுதலைப்புலிகளுக்கு உதவுபவர்கள் அடையாளம் காட்ட வேண்டும் என்றும் வலியுறுத்துகின்றனர். இராணுவத்தில் சேர்ந்தால் மாதம் ரூ.15 ஆயிரம் முதல் ரூ 20 ஆயிரம் வரை சம்பளம் தருவதாகவும், சேர மறுத்தால் சுட்டுக்கொன்று விடுவோம் என்றும் மிரட்டுகின்றனர். இவ்வாறு மிரட்டி பல இளைஞர்களை இராணுவத்தில் சேர்த்துள்ளனர். இதனால் நாங்கள் உயிருக்கு பயந்து போய் குடும்பத்தோடு இங்கு அகதியாக வந்துவிட்டோம் என்று கூறினார். (ஓ)

# முதல்வர் கருணாநிதி டில்லி சென்று பேசியிருந்தால் மத்திய அரசு உடனடி நடவடிக்கை எடுத்திருக்கும்

## -கம்யூனிஸ்ட் கட்சி செயலர் டி.ராஜா

இலங்கைப் பிரச்சினையைத் தீர்வுக்குக் கொண்டு வர முதல்வர் கருணாநிதி டில்லி செல்லவேண்டும். அவர் சென்னையில் இருந்து பேசுவது வீண் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியச் செயலர் டி.ராஜா கூறினார். அவர் மேலும் கூறியதாவது,

முதல்வர் கருணாநிதி மத்திய அரசில் முக்கிய பங்கு வகிக்கிறார். அவர் இலங்கைப் பிரச்சினையை சென்னையில் இருந்து கொண்டு பார்ப்பது வீண்.

இதுதொடர்பாக அவர் டில்லி சென்று பேசியிருந்தால் மத்திய அரசு உடனடி நடவடிக்கை எடுத்திருக்கும். அவரது தீவிரமில்லாத நிலையைக் கண்டு மத்திய அரசும் இலங்கைப் பிரச்சினையில் தீவிரம் காட்டாமல் உள்ளது.

தமிழர்களுக்கு பாதுகாப்பு தருவோம் என்று ராஜபக்ஷ பேசுவது நம்பமுடியாதது அவரது பேச்சை பிரதமர் மன்மோகன் சிங் கேட்கிறார். அவர் தமிழர்கள் நிலையைக் கருத்தில் கொள்ளவில்லை.

இனியாவது கருணாநிதி இப் பிரச்சினைக்கு தீர்வுகாண உடனடியாக டில்லி செல்ல வேண்டும். தமிழக அரசியல் தலை வர்களும் டில்லி சென்று பிரச்சினைக்கு தீர்வு காண தீவிரம் காட்ட வேண்டும் என்றார். (ஓ-5)

எலும்புத் துண்டுக்காக ஒரு நேர்மையான மனிதன்–தன்னை நாயாக ஆக்கிக் கொள்ள மாட்டான்.

– டென்மார்க்

வலம்புரி

# தமிழர்களுக்குக் கொடுப்பதற்கு அரசிடம் இருப்பது என்ன?

ஆயுதங்களைக் கைவிட்டு விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் பேச்சுவார்த்தைக்கு வரவேண்டுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

மீண்டும் இந்த அழைப்பை விடுவதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஆயுதங்களைக்கைவிட்டுபேச்சுவார்த்தைக்கு விடுதலைப் புலிகள் வருவார்கள் என்பது ஒரு போதும் நடைமுறைச் சாத்தியமானதல்ல என்பது நிறுத்திட்டமான உண்மை.

எனவே நடைமுறைக்குச் சாத்தியமன்ற விடயப் பொருள் பற்றி பேசுவதும் –எழுதுவதும் வீண் விரயம் என்ற அடிப்படையில் அதனை அப்படியே விட்டுவிடலாம்.

ஆனால் ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டு பேச்சுவார்த்தைக்கு விடுதலைப் புலிகள் வரவேண்டுமென்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அழைப்பின் அடுத்த பக்கத்தில் ஈழத்தமிழர்களுக்கு கொடுப்பதற்காக இலங்கை அரசு எதனை வைத்திருக்கிறது என்பதே இப்போது எழும் கேள்வியாகும்.

இலங்கை இனப்பிரச்சினை இத்துணை அழிவுகளை கடந்து வருவதற்கு மூலகாரணம் என்ன? என ஆராய்ந்தால் முடிபு இனப்பிரச்சினைக்கு தீர்வு எதுவுமே இலங்கை அரசிடம் இல்லை என்பதாகவே அமையும்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படவேண்டுமென்ற உறுதியான நிலைப்பாடு இலங்கை அரசுகளிடம் இருந்திருந்தால் பிரச்சினை எப்போதோ முடிபடைந்திருக்கும்.

ஆனால், இன்றுவரை எந்தத் தீர்வுத்திட்டமும் அரசிடம் இல்லை. இலங்கை அரசை பொறுத்தவரை இது பௌத்த சிங்கள நாடு. இங்கு தமிழர்களுக்கு எந்த உரிமையும் கிடையாது என்பதாகும்.

இந்நிலையிலிருந்து இலங்கை அரசு விடுபட வேண்டும். விடுதலைப் புலிகளுடன் ஐக்கிய தேசியக் கட்சி அரசு பேச்சுவார்த்தை நடத்தியது.

ஆறு சுற்றுப்பேச்சுக்கள் இடம்பெற்ற போதிலும் எந்தத் தீர்வையும் அரசினால் முன்வைக்க முடியவில்லை.

இதன் பின்னர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஏற்பாட்டில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையில், சர்வகட்சிக்குழு கூடியது.

பல தடவை கூடுவதும் சில கட்சிகள் அதிலிருந்து வெளியேறுவதுமான நாடகத்தின் மத்தியில் சர்வகட்சிக்குழுவினால் முன்மொழியப்பட்ட தீர்வுத்திட்டமொன்றை பேராசிரியர் திஸ்ஸ விதாரண, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கையளித்தார்.

கையளிப்பு வைபவம் தடல்புடலாக ஊடகங்களில் வெளிவந்தது. அதன் பின்னர் அதுபற்றி யாருமே வாய் திறக்கவில்லை. இப்போது 13–வது திருத்தச் சட்டமூலம் பற்றி பேசுகின்றார்கள்.

13–வது திருத்தச் சட்டமூலத்தை தொடவும் மாட்டோம் என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முடிபு.

ஆக,இனப்பிரச்சினைக்குத் தீர்வாக இலங்கை அரசிடம் எதுவுமே இல்லை என்பது இதிலிருந்து தெளிவாகின்றது.

அதுமட்டுமன்றி இனப்பிரச்சினைக்கு தீர்வாக எதனை வழங்குவதற்கும், நாடாளுமன்றத்தில் அனுமதி கிடையாது என்பதால் ஈழத் தமிழர்களின் எதிர்காலம் பற்றிய ஏக்கம் தமிழர் நெஞ்சங்களில் தீவிரமடையவே செய்கிறது.

# நிலங்களைக் கைப்பற்றுவது மாத்திரம் போரின் முழுமையான வெற்றியல்ல

## ஐ.தே.க. பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க

(கொழும்பு)

நிலங்களைக் கைப்பற்றுவது மாத்திரம் யுத்தத்தின் முழுமையான வெற்றியெனக் கூறமுடியாதென ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க



தெரிவித்துள்ளார்.

நிலங்களைக் கைப் பற்றுவதுடன் நிலையான சமாதானத்துக்கு அரசியல் தீர்வொன்றை முன்வைக்க வேண்டுமெனவும் கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் கூறினார்.

அண்மையில் நடைபெற்று முடிந்த சப்ரகமுவ மற்றும் வடமத்திய மாகாணசபைத் தேர்தல் பிரசாரங்களில் கிளிநொச்சியைக் கைப்பற்றப் போவதாகவே கூறி வந்தது. தற்பொழுது அதனை மாற்றி பூநகரியைக் கைப்பற் றியுள்ளது என அத்த நாயக்க குறிப்பிட்டார்.

இராணுவத்தினரின் நிகழ்ச்சி நிரலில் இலங்கை அரசாங்கம் தலையிடக்கூடாது என வலியுறுத்தியிருக்கும் அவர் அரசியல் இலாபங்களுக்காக அரசாங்கம் இராணுவத்தின் நிகழ்ச்சி நிரல்களில் தலையிட்டிருப்பதாகக் குற்றஞ் சாட்டினார்.

பூநகரியை வெற்றிபெற்ற இராணுவத்தினரைப் பாராட்டுவதுடன் அவர்களுக்குத் தாம் கௌரவம் அளிப்பதாகவும் இராணுவ வெற்றிகளை அரசியல் மயப்படுத்த அரசாங்கம் முயற்சிக்கக் கூடாதெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன் அரசாங்கம் நிலங்களைக் கைப்பற்றுவதுடன் அரசியல் தீர்வொன்றையும் முன்வைக்க வேண்டியது அவசியமெனவும் அவர் குறிப்பிட்டார். (ஓ)

# இடம்பெயர்ந்த வன்னி மக்கள் ஒரு நேர உணவுடனேயே வாழ்கின்றனர்

## வன்னி சென்று திரும்பிய எம்.பி.எஸ்.ஜெயானந்தமூர்த்தி

(கொழும்பு)

வன்னியில் 3 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். அவர்களில் பெரும்பாலானோருக்கு போதிய இருப்பிட, உணவு, சுகாதார வசதிகள் இல்லை. பலருக்கு ஒருவேளை உணவே கிடைக்கிறது என தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்த மூர்த்தி தெரிவித்தார். த.தே.கூட்டமைப்பின் மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினரான சந்திரகாந்தன் சந்திரநேருவுடன் அண்மையில் வன்னிக்குச் சென்று இடம் பெயர்ந்த மக்களின் நிலைமைகளை நேரில் அவதானித்த அவர் இது தொடர்பாக கேசரி வார இதழுக்கு அளித்த விசேட செவ்வியொன்றிலேயே இவ்வாறு கூறினார்.

வன்னி நிலைமைகள் குறித்து அவர் தகவல் தருகையில் வன்னியில் 3 இலட்சத்து 20 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்திருக்கிறார்கள். இவர்கள் கூடுதலாக கண்டாவளை, புதுக்குடியிருப்பு, விசுவமடு, தர்மபுரம் போன்ற பகுதிகளில் தங்கியுள்ளனர். அவர்களுக்கு இன்னும் இருப்பிட வசதி முழுமையாக அமைத்துக்கொடுக்கப்படவில்லை. அந்த மக்கள் மரநிழல்களில், மழைவந்தால் நீர் நிரம்பக்கூடிய வயல்கள், பயிர்ச்செய்கைக் காணிகள் போன்ற வற்றிலேயே குடிசைகளை கொட்டில்களை அமைத்து தங்கியுள்ளனர்.

அரசாங்கம் தாராளமாக அங்கு உணவுப் பொருட்கள் அனுப்பிவைக்கபடுவதாகவும் உணவுப் பொருட்கள் போதுமானளவு அங்கிருப்பதாகவும் கூறுகிறது. ஆனால் அங்கு மக்களுக்கு வழங்கப்படும் உணவுப்பொருட்கள் மிகச் சொற்பமாகவே உள்ளன. பெரும்பாலானோர் ஒரு நேர உணவையே உட் கொள்கின்றனர். அதிகமானோர் நிவாரணத்தையே நம்பியிருக்கின்றனர். ஏனெனில் இவர்களின் தொழில் வாய்ப்புகள் முற்றுமுழுதாக அழிக்கப்பட்டுள்ளன. தொழில்செய்ய முடியாத சூழல் காணப் படுகிறது. அதனால் உணவுப் பற்றாக்குறை காணப்படுகிறது.



கிளிநொச்சி வைத்தியசாலை இயங்கிக் கொண்டிருந்தாலும் அதன் 2–3 பகுதிகள் வேறிடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன. அவ்வைத்தியசாலைகள் பாடசாலைக் கட்டிடங்கள் போன்ற வற்றிலும் தற்காலிகமாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஒட்சிசன் சிலிண்டர்களை வன்னிக்கு எடுத்துச் செல்வதற்கு பாதுகாப்பு அமைச்சு தடைவிதித்திருக்கிறது.

இதனால் கடுமையான நோயாளிகள், சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்படும் நோயாளிகளுக்கு ஒட்சிசன் வழங்க முடியாதுள்ளது. அத்துடன் சத்திரசிகிச்சை செய்யக்கூடிய மருத்துவர்கள் குறைந்த எண்ணிக்கையிலேயே உள்ளனர். முக்கியமான மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு காணப்படுகிறது.

பாம்புக்கடியினால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் நூற்றுக்கு மேற்பட்டோர் உள்ளனர். பாம்புக்கடியினால் குழந்தைகள், வயோதிபர்கள் உட்பட சுமார் 20 பேர் இறந்துள்ளனர். ஆனால் பாம்புக் கடிக்கான சிகிச்சைக்குரிய வசதிகள் அங்கு மிகக் குறைவாகவே உள்ளனர் என்றார். (ஓ)

# பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத்தேர்தல் நடத்தப்பட வேண்டும்

## ஜே.என்.பி. தலைவர் விமல் வீரவன்ச கோரிக்கை

பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் ஒன்று நடத்தப்பட வேண்டுமென ஜே.என்.பி.யின் தலைவர் விமல் வீரவன்ச கோரி க்கை விடுத் துள்ளார்.



இந்தத் தேர்தலின் மூலம் நாட்டைபொறுப் பேற்றுக்கொள்ளக் கூடிய தேசியவாத அமைப்பொன்று உருவாக்கப் பட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தில் வெற்றியடைந்ததன் பின்னர் நாட்டை நல்வழிப்படுத்தக் கூடிய சக்தியொன்று அமைக்கப்பட வேண்டுமெனவும் தற்போதைய பாராளுமன்றம் எந்தவொரு பொறுப்பும் அற்ற நிலையில் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆட்சியமைக்க ஒத்துழைப்பு வழங்கிய ஜே.வி.பி.வெளியே சென்றுள்ளதாகவும், எதிர்ப்பு தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு பிரிவு தற்போது அரசாங்கத்தில் இணைந்து கொண்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ள அவர் இந்த நிலைமை மாற்றியமைக்கப்பட வேண்டும் எனவும் நாட்டுப் பற்றுடைய அமைப்புக்களினாலேயே நாட்டில் நல்லாட்சியை நிறுவ முடி யும் எனவும் தெரிவித்துள்ளார். (ஓ)

# சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி

## செயல்புரியும் விதம்



செயலற்றிருப்பதை எல்லா வகையிலும் தவிர்க்க வேண்டும். செயல் நிலை என்றாலே எதிர்த்தல் என்பது தான் எப்போதும் பொருள் . மனம் மற்றும் உடல் சம்பந்தமான எல்லா தீமைகளையும் எதிர்த்துப் போரி. எதிர்ப்பதில் வெற்றி பெற்ற பின்னரே அமைதி வரும். யாரையும் வெறுக்காதே, தீமையை எதிர்க்காதே என்றெல்லாம் சொல்வது மிகவும் எளிது. ஆனால் பொதுவாக அதைப் பின்பற்றினால் எப்படியிருக்கும் என்பது நமக்குத் தெரிந்ததே. சமுதாயத்தின் கண்கள் நம்மீது இருக்கும் போது நாம் பெரிய அஹிம்சாவாதி போல் நடிக்கலாம்.

ஆனால் அந்த நேரம் முழுவதும் நமது இதயம் அரித்துக்கொண்டிருக்கும் அஹிம்சையின் விளைவாக வருகின்ற அமைதியை ஒரு சிறிது கூட நாம் அனுபவிக்க வில்லை. இதை விட எதிர்ப்பது நல்லதென நமக்குத் தோன்றுகிறது. நீ பணம் சேர்க்க ஆசைப்படுகிறாய் அதே வேளையில் பணத்தைக் குறிக்கோளாக உடையவனை உலகம் முழுவதும் கொடியவன் என்று நினைக்கிறது என்பதை அறிந்ததால் பணத்தைச் சேர்ப்பதற்கான போராட்டத்திலும் ஒரு வேளை இறங்கத்துணிய மாட்டாய் ஆனால் உன் மனமோ பணம் பணம் என்றே இரவும் பகலும் அலைந்துகொண்டிருக்கும். இது கபடத்தனம்! இதனால் எந்தப் பலனும் இல்லை. உல கத்தில் குதித்துப் போராடு. படவேண்டிய வேதனைகளையெல்லாம் படு! இன்பங்களையெல்லாம் அனுபவி! அதன் பிறகே துறவு வரும்.

# பூநகரி களமுனை பின்னடைவு புலிகளுக்கு நிரந்தரமானதா?

வன்னி மேற்கு போர் அரங்கில் இப்போது இடம்பெற்றுவரும் உக்கிரமான சண்டைகளில் படையினர் குறிப்பிடத்தக்க சில கேந்திர நிலைகளைக் கைப்பற்றி இருப்பினும் அவர்கள் தரப்பில் பெரும் இழப்புக்கள் ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

படைத்தரப்பு இப்போது சேதங்கள் தொடர்பான தகவல்கள் வெளியிடுவதை தவிர்த்துள்ளது. முன்னர் படைத்தரப்பு வெளியிடுகின்ற இழப்பு விபரங்கள்-அது குறைக்கப்பட்டதாகவே இருந்தாலும் சண்டையின் தன்மையை புரிந்துகொள்ள உதவியது.

ஆனால் இப்போது இழப்பு விபரங்களை அரசாங்கம் முற்றாகவே மறைத்துவிடுவதால் மோதல்களின் தீவிரம் தொடர்பாக தென்னிலங்கை மக்கள் அறிந்து கொள்ளவோ புரிந்துகொள்ளவோ முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

புலிகளுக்கு பலத்த இழப்பு, கடும் சேதம் என்றும் படையினருக்கு சிறிய அளவு சேதங்கள் ஏற்பட்டதாகவும் வெளிப்படுத்தப்படுகின்ற வார்த்தைகளுக்குள் இழப்புக்களின் கனதி மறைந்து போய்விடு கிறது.



ஒக்டோபர் மாதத்தில் 172 படையினர் கொல்லப்பட்டு 1122 படையினர் காயமடைந்தனர் என்று நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்பட்ட பின்னர் தான் சண்டைகளின் உக்கிரம் தணியவில்லை என்பது தென்னிலங்கை மக்களுக்கு தெரியவந்தது.

ஒக்டோபர் நிலையை விட மோசமாக இந்த மாதத்தில் சண்டைகள் தீவிரமடைந்திருக்கின்றன. இரு தரப்பிலும் இந்தக்காலத்தில் இழப்புகள் அதிகமாகவே ஏற்பட்டிருக்கின்றன. இந்த மாதத்தின் முதல் 12 நாட்களிலும் புலிகளின் சுமார் 30 சடலங்களைப் படையினர் கைப்பற்றினர். அதைவிட இறந்தோர் தொகை அதிகம். அதேவேளை புலிகளும் தாம் கைப்பற்றிய சடலங்கள் சிலவற்றை படையினரிடம் ஒப்படைத்திருக்கின்றனர்.

இப்போது சண்டைகள் அக்கராயனில் இருந்து கோணாவில் -ஸ்கந்தபுரம் -முட்கொம்பன் நோக்கியதாகவும் கொக்காவில் மாங்குளம் வரையான ஏ-9 வீதியை நோக்கியதாகவும் பூநகரி நோக்கியதாகவும் என்று வன்னி மேற்கில் 3 களமுனைகளில் காணப்படுகின்றன. அக்கராயனை இந்த மாதத்தின் முதல் வாரத்தில் கைப்பற்றிய படையினர் இப்போது கோணாவில், முட்கொம்பன் மற்றும் ஸ்கந்தபுரம் பகுதிகளை நோக்கி முன்னேறும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

57ஆவது டிவிசனின் மூன்று பிரிகேட்கள் கிளிநொச்சி நோக்கிய இந்த நகர்வுகளில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றன. இப்போது படையினர் கிளிநொச்சி நகரை ஏ-9 வீதி வழியாகச்சென்று கைப்பற்றும் திட்டத்தைக்கொண்டிருப்புதாக தெரியவில்லை.

கிளிநொச்சிக்கு பின்புறமாகவுள்ள அதாவது மேற்குப்புறத்தால் முன்னேறும் முயற்சிகளே மூர்க்கமடைந்திருக்கின்றன.கடந்த 5ஆம் திகதி அக்கராயனை கைப்பற்றிய படையினர் அதற்கு மறுநாளாக 6ஆம் திகதி தொடக்கம் கோணாவில், ஸ்கந்தபுரம், சிவநகர் ஊற்றுப்புலம், முட்கொம்பன் போன்ற பகுதிகளைக் கைப்பற்றி உருத்திரபுரம் வழியாக பெரிய பரந்தனைக் கைப்பற்றும் திட்டத்துடன் நகர்வுகளை மேற்கொண்டு வருவது உறுதியாகியிருக்கிறது.

இது கிளிநொச்சி நகருக்கு மேற்கேயுள்ள பிரதேசம். இந்த நகர்வின் மூலம் பரந்தனைக் கைப்பற்றி கிளிநொச்சியை மும்முனைகளில் வளைத்து நெருக்கப் படைத்தரப்பு திட்டமிட்டிருக்கிறது.

ஆனால் கடந்த வாரத்தில் கோணாவில், ஸ்கந்தபுரம் நோக்கிய பல படை நகர்வுகள் படையினருக்கு வெற்றி அளிக்கவில்லை. புலிகள் அக்கராயன் மண்ணரணை இழந்த போது கோணாவில்,ஸ்கந்துபுரம்,முட்கொம்பன் நோக்கி முன்னேறும் படையினரைத் தடுத்து நிறுத்தும் தீவிர தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

கடந்த 6ஆம் திகதி கொக்காவில் கள் முனையில் தொடங்கிய சண்டை 9ஆம் திகதி முதல் அக்கராயன் திசையில் பெரும் சமராக நடந்து வருகிறது.

கடந்த 9ஆம் திகதி முதல் தொடர்ச்சியாக 5 தினங்கள் இந்தப்பகுதிகளில் நடந்த கடும் சண்டைகளில் படைத்தரப்புக்கு பலத்த இழப்புக்களை ஏற்படுத்தியிருப்பதாக புலிகள் அறிவித்திருக்கின்றனர்.

கடந்த 5ஆம் திகதி முட்கொம்பனை கைப்பற்ற படையினர் இரு முனைகளில் மேற்கொண்ட முயற்சியை தாம் தடுத்து நிறுத்தியதில் 10 படையினர் கொல்லப்பட்டதாக புலிகள் தெரிவித்திருந்தனர்.இதன் பின்னர் 9ஆம் திகதி அக்கராயனில் இருந்து ஸ்கந்தபுரம் நோக்கி முன்னேற முற்பட்ட படையினர் மீது நடத்திய தாக்குதலில் 30 படையி னர் கொல்லப்பட்டு இரண்டு சடலங்களும் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்ட தாக அவர்கள் அறி வித்தனர்.

11ஆம் திகதி அக்கராயனில் இருந்து கோணாவில் நோக்கி முன்னேற முயன்ற படையினரை தடுத்து நிறுத்தி நடத்திய தாக்குதலில் 15 படையினர் கொல்லப்பட்டனர். பலர் காயமுற்றனர். 12ஆம் திகதி முட்கொம் பனில் நடந்த மோதல்களில் 20 படையினர் கொல்லப்பட்டு 20 பேர் காயமுற்றதாகவும் அதே நாள் கோணாவில் நோக்கி படையினர் முன்னேற முற்பட்ட போது நடந்த சண்டையில் 12 படையினர் கொல்லப்பட்டு 25 பேர் காய மடைந்ததாகவும் புலிகள் தெரிவித்தனர். 13ஆம் திகதி இந்த மோதல்கள் தொடர்ந்து இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அக்கராயனின் அமைந்தது போன்ற பாரிய மண்ணரணையோ தடுப்பரணையோ புலிகள் இப்பகுதியில் அமைக்காதபோது தமது முறியடிப்பு அணிகளைக் கொண்டு நடத்தும் தாக்குதல்களால் 57ஆவது டிவிசனுக்கு பலத்த தேசங்கள் ஏற்படுத்தி வருவதாக கூறப்படுகிறது.

ஆனால் படைத்தரப்பு இந்தத் தகவல்களை உறுதிப்படுத்தவும் இல்லை. மறுக்கவும் இல்லை.

அடுத்து புதிதாக உருவாக்கப்பட்ட பிரிகேடியர் சத்தியப்பிரிய இயனகே தலைமையிலான 63 டிவிசன் கடந்த 6ஆம் திகதி பனிக்கன்குளம், கிழவன்குளம், பழைய முறுகண்டிப்பகுதிகளில் மேற்கொண்ட பாரிய முன்னகர்வு முயற்சியை புலிகள் முறியடித்திருப்பதாக அறிவித்திருக்கின்றனர்.

ஏ-9 வீதியை கைப்பற்றும் நோக்கில் 6ஆம் திகதி தொடங்கிய இந்த நகர்வை தாம் மறுநாள் பி.ப. 3.30 மணிவரை நடத்திய எதிர்த்தாக்குதலின் பின்னர் முறியடித்திருப்பதாக புலிகள் கூறுகின்றனர். முன்னேறிய படையினர் இந்தப்பகுதியில் புலிகளின் 7 சடலங்களை கைப்பற்றிய போது பின்னர் அவர்கள் பின் தள்ளப்பட்டதாகக் கூறப்படுகிறது.

ஆனால் படைத்தரப்போ தாம் ஏ-9 வீதி நோக்கி 3கிலோ மீற்றர் முன்னோறியிருப்பதாக கூறுகிறது. பனிக்கன் குளத்தில் இருந்து 3 கிலோமீற்றர் தூரத்திற்கு முன்னேறி இருந்தால் ஏ-9 வீதியை கடந்து சென்றிருக்கவேண்டும். ஆனால் கிளிநொச்சிக்கும் மாங்குளத்திற்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் ஏ-9 வீதியில் எந்தப் பகுதியையும் படையினர் கைப்பற்றவில்லை.

கடந்த 6,7ஆம் திகதிகளில் நடந்த சுமார் 27 மணிநேர சண்டையில் படையினர் தரப்பில் 45 பேர் கொல்லப்பட்டு 100ற்கும் அதிகமானோர் காயமுற்றதாக புலிகள் கூறியுள்ளனர். இந்தச்சண்டைகளில் படையினரின் இரண்டு சடலங்களையும் ஆயுதங்களையும் கைப்பற்றியதாக கூறிய புலிகள் இரு படையினரின் சடலங்களையும் புதுக்குடியிருப்பில் வைத்து செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைத்திருந்தனர்.

63ஆவது டிவிசனின் 3 பிரிகேட்கள் இப்போது கொக்காவிலுக்கும் மாங்குளத்திற்கும் இடைப்பட்ட ஏ-9 வீதியை கட்டுப்பாட்டில் கொண்டு வரும் நோக்கில் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

இந்த டிவிசன் ஆரம்பிக்கப்பட்ட நாளில் இருந்து இதுவரையில் புலிகளின் சுமார் ஒரு டசின் சடலங்களை கைப்பற்றிய போதிலும் பெருமளவில் சேதங்களைச் சந்தித்திருக்கிறது. இதன் காரணமாக தொடக்கத்தில் இரண்டு பிரிகேட்கள் இணைக்கப்பட்டிருந்த இந்த டிவிசனின் புதிதாக 57 -3ஆவது பிரிகேட்டையும் இராணுவத் தலைமை இணைத்திருக்கிறது.

லெப்.கேணல் பிரதாப் திலகரட்ண தலைமையிலான இந்த பிரிகேட்டின் 7ஆவது சிங்க ரெஜிமேன் மற்றும் 10ஆவது இலகு காலாட் படை என்பன உள்ளடக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 30ஆம் திகதி நாச்சிக்குடா படையினரிடம் வீழ்ச்சி அடைந்தது லெப்.கேணல் தேசப்பிரிய குணவர்த்தன தலைமையிலான 58-1 பிரிகேட் நாச்சிக்குடாவில் இருந்த புலிகளின் பாதுகாப்பு அரண்களை உடைத்துக் கொண்டு முன்னேறியது.

12ஆவது கஜபா படைப்பிரிவு, 5ஆவது சிக்னல் படைப்பிரிவு மற்றும் 11ஆவது ஆட்லறி படைப்பிரிவு ஆகியன இந்த நகர்வின் ஈடுபடுத்தப்பட்டன. நாச்சிக்குடாவிற்கு தெற்காக 58-1 பிரிகேட் முன்னேற ஜெயபுரம் பக்கமாக முன்னேறி நாச்சிக்குடாவுக்கு வடக்கே சுற்றிவளைப்பை இறுக்கியது. கேணல் சுறாஜ்பஞ்வின் தலைமையிலான 58-1பிரிகேட் அதேவேளை லெப். கேணல் சஞ்சயவணிகசிங்க தலைமயிலான 58-2 பிரிகேட் ஏ-32 வீதிக்கு கிழக்காக பரந்தன்-பூநகரி வீதியிலுள்ள நல்லூர் பகுதியை கைப்பற்றியது.

நாச்சிக்குடாவுக்கு அடுத்ததாக சுன்னாவில் பகுதியை கைப்பற்றிய படையினர் அங்கிருந்து முன்னேறி செம்பன்குண்டுவை அடைந்தனர்.

இதன் மூலம் வேரவில்,வலைப்பாடு பகுதிக் கான விநியோகத்தைத் தடுத்தனர். இதன் பின் னர் பாலாவி, பொன்னாவெளி ஊடாக வலைப் பாடு செல்லும் வீதியை கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர்.ஏ-32 வீதியில் பூநகரிக்கு தெற்கே சுமார் 7கிலோமீற்றர் தொலைவில் செம்பன் குண்டு பகுதி இருக்கிறது.

செம்பன்குண்டு பகுதி சதுப்பு நிலம் சார்ந்த இயற்கை அரணாக இருந்தது ஆயினும் புலிகள் இங்கு கடும் சண்டை செய்தாலும் தொடர்ந்து தக்க வைப்பதில் பெரும் பிரச்சினைகளை எதிர் நோக்கினர்.

ஏ-32 வீதிக்கு கிழக்குப் புறமாக முன்னேறும் லெப்.கேணல் சஞ்சையவணிக சிங்கையின் தலைமையிலான 58-2 பிரிகேட்டின் கீழ் இருக்கின்ற லெப்.கேணல் நந்தன துணுவில தலைமையிலான 12 ஆவது கெமுனுவோச் பூநகரி பரந்தன் வீதியைக் கைப்பற்றியது.

செம்மன் குண்டு பகுதியில் கைப்பற்ற படையினர் கடந்த 10 ஆம் திகதி மாலையில் மேற்கொண்ட நடவடிக்கைக்கு எதிராக புலிகள் உக்கிரமான தாக்குதல்களை நடத்தியிருந்தனர். இரவிரவாக நடந்த மோதல்களில் படையினர் தரப்பில் 30 பேர் கொல்லப்பட்டு 50 பேர்காய முற்றதாக பாதுகாப்புத் தரப்புடன் தொடர்புடைய வட்டாரங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. இந்த நகர்வை 58-3 பிரிகேட் மேற்கொண்டிருந்தது.

அதேவேளை மறுநாளான 11ஆம் திகதி ஏ-32 வீதிக்கு கிழக்காக ஆலங்கேணி-நல்லூருக்கு தெற்காக 58.2ஆவது பிரிகேட் மற்றொரு தாக்குதலை நடத்தியது. இதன் போது ஏற்பட்ட கடும் சண்டையில் புலிகளின் 7பேர் கொண்ட அணி படையினரின் சுற்றிவளைப்பில் சிக்கியது. இதில் 4 புலிகள் கொல்லப்பட 3 பெண் புலிகள் படையினரால் கைது செய்யப்பட்டனர். அவர்களைக் கொண்டு இப்போது படைத்தரப்பு பிரசாரப்போரை நடத்தி வருகிறது.

இந்த முனையில் படையினர் இப்போது பி-69 எனப்படும் பரந்தன்-பூநகரி வீதியை கைப்பற்றியது.

அதேவேளை ஏ-32 வீதிக்கு மேற்காக படையினரின் முற்றுகைக்குள்ளாகியிருந்த வேரவில், கிராஞ்சி, வலைப்பாடு, பேய்முனை, பாலாவி, பொன்னாவெளி போன்ற கடற்புலிகளின் மற்றொரு கேந்திரப் பிரதேசம் 58-1 பிரிகேட்டினால் எந்த எதிர்ப்புமின்றி கைப்பற்றப்பட்டது.

கடற்புலிகளுக்கு வடமேற்கு கரையோரத்தில் இருந்த கடைசித் தளப்பகுதியையும் இது இல்லாமல் செய்து விட்டது. இப்போது பள்ளிமுனைக்கும் கௌதாரிமுனைக்கும் இடைப்பட்ட சிறிய கடற்பிரதேசமே அவர்களின் கட்டுப்பாட்டில் உள்ளது. இதன் மூலம் புலிகளால் பெரிதாக எதைச் செய்யவும் முடியாது. இந்தப் பிரதேசங்களின் வீழ்ச்சியைத் தடுக்கவும் முடியாது என்ற கட்டம் வந்துவிட்டது.

மன்னாரில் இருந்து 82 கி.மீ. நீளமுடைய ஏ-32 வீதியை முழுமையாக கைப்பற்றி, பூநகரியையும் படையினர் கைப்பற்றியுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

பூநகரியின் வீழ்ச்சி என்பது புலிகளுக்கு பெரும் பின்னடைவாகவே இருக்கும். இதன் மூலம் மேற்கு வன்னிக்களத்தில் புலிகளுக்கு கடந்த இரண்டு தசாப்தங்களாக இருந்து வந்த ஆதிக்கம் முற்றாக விடுபட்டுப்போகும் நிலை ஏற்பட்டிருக்கிறது.



இந்தப் பின்னடைவு புலிகளுக்கு தற்காலிகமானதா அல்லது நிரந்தரமானதா என்பதை புலிகளின் வருங்கால நடவடிக்கைகளே தீர்மானிப்பதாக இருக்கும்.

(நன்றி :வீரகேசரி)

# லாகூர் பாட்ஷாஸ் சம்பியன்



இம்ரான் நஷீரின் அதிரடியான சதத்தின் மூலம் லாகூர் பாட்ஷாஸ் அணி 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வென்று சம்பியனானது.

இந்தியன் கிரிக்கெட் சபைக்கு எதிராக முன்னாள் இந்திய அணித்தலைவர் கபில் தேவினால் ஆரம்பிக்கப்பட்ட இந்திய கிரிக்கெட் லீக் (ஐ.சி.எஸ்) அமைப்பின் இருபது - 20 தொடர் நடைபெற்று வந்தது.

இதில் இன்ஷமாம் உல்ஹக் தலைமையிலான லாகூர் பாட்ஷாஸ் அணியும் கிறில் ஹரிஸ் தலைமையிலான ஹைதராபாத் ஹீரோஸ் அணியும் இறுதிச் சுற்றுக்கு தெரிவாகின.

மூன்று ஆட்டங்களாக நடைபெற்ற இறுதிச் சுற்றுப்போட்டியில் முதல் இரண்டு போட்டிகளிலும் தலா ஒரு போட்டியில் வெற்றி பெற்று இரு அணிகளும் சமனிலையில் இருந்த நிலையில் தீர்க்கமான மூன்றாவது இறுதியுமான போட்டி நேற்று அகமதாபாத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய ஹைதராபாத் ஹீரோஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 158 ஓட்டங்களை எடுத்தது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய லாகூர் பாட்ஷாஸ் அணி இம்ரான் நசீரின் அதிரடியான சதத்தின் மூலம் 13.5 ஓவர்களில் இரண்டு விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 160 ஓட்டங்களை எடுத்து 8 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று இறுதிச் சுற்றில் 2-1 என்ற கணக்கில் சம்பியனானது.

இதில் இம்ரான் நசீர் 44 பந்துகளில் (7பவுண்டரிகள்,11 சிக்ஸர்கள்) அடங்கலாக 111 ஓட்டங்களை குவித்து ஆட்டநாயகன் விருதையும் பெற்றார்.

# பயிற்சி ஆட்டம் சமனிலையில் முடிவு

இலங்கை -சிம்பாவே லெவின் பயிற்சி ஆட்டம் சமனிலையில் முடிபுற்றுள்ளது.

சிம்பாவேக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதற்கு முன்பாக சிம்பாவே லெவின் அணியுடனான நான்கு நாள் பயிற்சி ஆட்டதில் இலங்கை அணி விளையாடியது.

கடந்த 12ஆம் திகதி ஆரம்பமான இப்பயிற்சி ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே லெவின் அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 159 ஓட்டங்களை எடுத்தது.

இதில் சிக்கும்புரா 33 ஓட்டங்களையும் மஷ்ஹட்ஷா 26, மஹஸிஹென்சி 25 மற்றும் உற்ஷயா 22 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் மெண்டிஸ் 4 விக்கெட்டுக்களையும் பெர்னாண்டோ 3 விக்கெட்டுக்களையும் மத்யூஸ் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினார்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 567 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இதில் குமார் சங்கக்கார 174 ஓட்டங்களையும் கபுகெதர 150 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தினர். தரங்க 88 ஓட்டங்களையும் உடவத்த ஆட்டமிழக்காமல் கன்டாம்பி தலா 55 ஓட்டங்களையும் எடுத்தனர்.

தொடர்ந்து முதலாவது இன்னிங்ஸில் 408 ஓட்டங்கள் பின்னிலையில் இருந்த சிம்பாவே லெவின் அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி நேற்று முன்தினம் நான்காவது இறுதிநாள் ஆட்ட நேர முடிவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 238 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதன் மூலம் இரு அணிகளுக்குமிடையிலான பயிற்சி ஆட்டம் சமநிலையில் முடிபுற்றது.

இதில் மஷஹட்ஷா 72, மற்ஸிஹென்சி 71, சிப்கபா 59 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் மெண்டிஸ், 4 விக்கெட்டுக்களையும் மத்யூஸ் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

## அமெரிக்காவில் எதிர்வரும் ஏப்ரலில் 48 அணிகள் மோதும் இருபது - 20

அமெரிக்க கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் இருபது - 20 தொடர் நடைபெறவுள்ளது.

இந்தியா, பாகிஸ்தான் மற்றும் வட அமெரிக்க நாடுகளுடன் இலங்கை, அயர்லாந்து, மேற்கிந்தியத் தீவுகள், அவுஸ்திரேலியா, ஐக்கிய அரபு நாடுகளைச் சேர்ந்த முன்னணி கழக அணிகளும் இந்தப் போட்டித் தொடரில் (ஏப்.4-12) கலந்து கொள்கின்றன.

கலிபோர்னியா, வாஷிங்டன், டெக்சாஸ், இலினாய், கனெக்டிகட், நியூயோர்க், நியூ ஜெர்சி,ஜியார்ஜியா, வெர்ஜினியா, புளோரிடா மாகாணங்களைச் சேர்ந்த கழக அணிகள் உட்பட மொத்தம்48 அணிகள் இந்த இருபது -20 கிரிக்கெட் திருவிழாவில் களமிறங்கவுள்ளதாக அமெரிக்கக் கிரிக்கெட் சபைத் தலைவர் மேக்குரோஷி தெரிவித்துள்ளார்.

# 2-வது ஒருநாள் போட்டி இன்று; இந்தியாவின் வெற்றி தொடருமா?

## யுவராஜ் ஆடுவது சந்தேகம்



இந்தியா-இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது ஒருநாள் சர்வதேசப் போட்டி இன்று இந்தூரில் நடைபெற்றுள்ளது.

இதில் முதல் ஒருநாள் போட்டியில் முதுகு பிடிப்போடு ஆடிய யுவராஜ் சிங் விளையாடுவதில் சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

யுவராஜ் ஆடுவது பற்றி இன்று காலை அவரது உடல் நிலையைப் பொறுத்து முடிபு எடுக்கப்படும் என்று அணித்தலைவர் தோனி குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறு யுவராஜ் விளையாடாத சந்தர்ப்பத்தில் விராட் ஹோகலி அல்லது தமிழக வீரர் விஜய்க்கு வாய்ப்பளிக்கலாம்.

இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கு இடையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற முதலாவது ஒருநாள் சர்வதேச போட்டியில் யுவராஜ் சிங்கின் அதிரடி சதத்தின் மூலம் இந்தியா 158 ஓட்டங்களால் இலகுவாக வெற்றியீட்டியமை குறிப்பிடத்தக்கது.

இது தவிர இன்றைய போட்டியில் வேகப் பந்து வீச்சாளர் இஷாந்த் சர்மா விளையாட மாட்டார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்மா காயம் காரணமாக முதலாவது ஒரு நாள் போட்டியிலும் விளையாட வில்லை. இதனிடையே இங்கிலாந்து அணியின் முன்னணி வேகப்பந்துவீச்சாளர் ரியான் சைட்பொத்தம் இன்றைய போட்டியிலும் விளையாட மாட்டார் என்று இங்கிலாந்து அணியின் பயிற்சியாளர் பீட்டர் மூர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் அவரை மூன்றாவது போட்டியில் களமிறக்க இங்கிலாந்து அணி எதிர்பார்த்துள்ளது.

ஏற்கனவே முதலாவது ஒருநாள் போட்டியில் படுதோல்வியடைந்த இங்கிலாந்து அணி இன்றைய ஆட்டத்தில் வெற்றி பெற



வேண்டிய கட்டாயத்துடன் களமிறங்குகிறது.

இதனால் இங்கிலாந்து வீரர்கள் அனைவரும் முழுத்திறமையை வெளிப்படுத்தி இந்தியாவுக்கு சவால் கொடுக்கும் வகையில் விளையாடலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(5)

## பால பண்டிதப் பரீட்சையில் சித்தியடைந்தோர்

ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் கீழைத்தேயக் கல்வி கல்லூரியினால் நடத்தப்பட்ட பாலபண்டித, பண்டித பரீட்சைகளில் சித்தியடைந்தோரின் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன. சித்தியடைந்தோர் விபரம் வருமாறு,

பண்டித பரீட்சை

செல்வி இ.சியாமினி (அச்சுவேலி தெற்கு) (முதலாம் பிரிவில் சித்தி), எஸ்.தங்கமயில் (நெல்லியடி)

பாலபண்டிதர் பரீட்சை

திருமதி ச.கவிதா (திருநெல்வேலி) (முதலாம் பிரிவில்சித்தி),செல்வி க.விமலா (இளவாலை) (இரண்டாம் பிரிவில் சித்தி),மா.கணநாதன் (அராலி),செ.விஜயகுமார் (கரணவாய் வடக்கு), நூனசித்தி ஆங்கிலம்) (பாடவகை 4), ப.தமிழ்மாறன் (அரியாலை) நூனசித்தி- பாடவகை 1 இலக்கணம்) (ச)

# சர்வதேச அரங்கில் 20-வது ஆண்டில் காலடி பதித்தார் சச்சின் டெண்டுல்கர்



(புதுடில்லி)

சச்சின் தனது கிரிக்கெட் வாழ்க்கையின் 20ஆவது ஆண்டில் நேற்று முன்தினம் காலடி எடுத்துவைத்தார். இதன்மூலம் அதிக காலம் கிரிக்கெட் விளையாடிய இந்திய வீரர் என்ற பெருமை பெற்றார். கிரிகெட் உலகின் தலைசிறந்த வீரர்களில் ஒருவராக கருதப்படுபவர் இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர். கடந்த 1989 நவம்பர் 15இல் கராச்சியில் தனது முதல் சர்வதேச போட்டியில் களமிறங்கினார்.

பின்னர் தனது சிறந்த ஆட்டத்தால் உலகின் நம்பர்-1 துடுப்பாட்டவீரர் என பலராலும் பாராட்டப்பட்டார். 19 ஆண்டுகளாக அசைக்க முடியாத வீரராக திகழ்ந்த இவர் நேற்று முன்தினம் தனது 20ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைத்தார்.

இதன்மூலம் அதிக ஆண்டுகள் இந்திய அணிக்காக சேவைசெய்துவரும் வீரர் என்ற பெருமை பெற்றார். முன்னதாக இந்திய வீரர் லாலா அமர்நாத் சரியாக 19 ஆண்டுகள் விளையாடியதே அதிகமாக இருந்தது.

இவர் 1933, டிசம்பர் 15 முதல் 1952, டிசம்பர் 15 வரை இந்திய அணிக்காக சர்வதேச போட்டியில் விளையாடினார். சர்வதேச அளவில் அதிக நாட்கள் கிரிக்கெட் விளையாடியவர் என்ற பெருமையை இங்கிலாந்தின் வில்பிரட் ரோட்ஸ் பெற்றுள்ளார்.

இவர் 1899, யூன் 1 முதல் 1930, ஏப்ரல் 12 வரை 30 ஆண்டுகள் 315 நாட்கள் விளையாடியுள்ளார். (5)

# முர்ரேவிடம் தோற்றாலும் முதல் எதிரி நடால்

## பெடரர் கூறுகிறார்

சமீபத்திய போட்டிகளில் இங்கிலாந்தின் அண்டிமுர்ரோவிடம் தோற்றிருந்தாலும் ஸ்பெயினின் நடால்தான் தன்னுடைய முதல் எதிரி என்று நட்சத்திர வீரர் ரோஜர் பெடரர் (சுவிஸ்சர்லாந்து) கூறினார்.


சீனாவில் நடக்கும் ஷாங்காய் மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டியின் கடைசி லீக் ஆட்டத்தில் அண்டி முர்ரேயுடன் பெடரர் நேற்று முன்தினம் மோதினார்.

மிகவும் விறுவிறுப்பாக அமைந்த இப்போட்டியில் முர்ரே 4-6,7-6,7-5 என்ற செட் கணக்கில் போராடி வென்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

முர்ரே உடன் இதுவரை 6 முறை மோதியுள்ள பெடரர், அவற்றில் 4 போட்டிகளில் தோற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. சமீபத்திய போட்டிகளில் முர்ரேவிடம் தோற்றிருந்தாலும் முதல் நிலை வீரர் நடால்தான் தனக்கு முதல் எதிரி என்று பெடரர் கூறினார்.

இது குறித்து அவர் கூறியதாவது, சமீபத்திய போட்டிகளில் முர்ரே வென்றிருந்தாலும் கிராண்ட்ஸ்லாம் போட்டிகள் என்று வரும்போது நடாலுக்கும் எனக்கும் இடையே தான் கடும் போட்டி நிலவுகிறது.

பெரிய போட்டிகளில் அவர்தான் எனது



பெடரர்

முதல் எதிரி. இன்னும் சில கிராண்ட்ஸ்லாம் இறுதிப் போட்டி போட்டிகளில் நாங்கள் இருவரும் மோதுவோம் என எதிர்பார்க்கிறேன்.

முதுகு வலி மற்றும் வயிற்று வலியுடன் ஷாங்காய் போட்டியில் விளையாடினாலும், முர்ரேவுக்கு கடைசி வரை நெருக்கடி கொடுத்தது திருப்தியாக உள்ளது இவ்வாறு பெடரர் கூறினார்.

இதனிடையே நேற்று முன்தினம் நடந்த ஷாங்காய் மாஸ்டர்ஸ் கிண்ண அரையிறுதி போட்டியில் அண்டி முர்ரே, நிகொலாய் டெவிடன்கோவிடம் 5-7, 2-6 என்ற செட் கணக்கில் வீழ்ந்தார்.

(5)




சென்னையில் விஜய் மேற்கொண்ட உண்ணாவிரதப் போராட்டத்தில் தனது தாய், தந்தையுடன் அவர் மேடையில் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம்.

# தற்போதைய நிலையில் யுத்த நிறுத்தம் அவசியமில்லை

## ஜனாதிபதி தெரிவிப்பு

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் தற்போது உள்ள நிலைகளின்படி போர்நிறுத்த உடன்படிக்கை அவசியமற்றது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பலவீனமடைந்திருக்கும் விடுதலைப்புலிகளை மீண்டும் ஒரு தடவை பலமடையச் செய்ய உதவ வேண்டுமா? எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

தமது புதுடில்லி விஜயம் தொடர்பாக தெளிவுபடுத்தும் புத்திஜீவிகளுடனான சந்திப்பொன்றின்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். தமிழகத்தில் போர்நிறுத்தம் தொடர்பான அழுத்தம் குறித்து இந்தியப் பிரதமர் தன்னிடம் எடுத்துக் கூறிய போது அந்த யோசனையைத் தான் முற்றாக நிராகரித்ததாகவும் ஜனாதிபதி இங்கு சுட்டிக்காட்டினார்.

யுத்தத்தில் இறுதிக் கட்டம் நெருங்கியிருப்பதால் அடுத்த நடவடிக்கையாகத் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு யோசனையை முன்வைக்கும் விடயத்தில் தான் கூடுதல் அக்கறை காட்டி வருவதாகவும் கூடிய விரைவில் அரசியல் தீர்வு யோசனையை முன்வைக்க இருப்பதாகவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ புத்திஜீவிகளுடனான சந்திபின்போது எடுத்துரைத்தார். (ச-5)

# கிளிநொச்சியை நோக்கி கடும் ஷெல் தாக்குதல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மற்றும் மணலாறுப் பகுதிகளில் மக்கள் குடியிருப்புக்களை நோக்கிப் படையினர் தொடர்ச்சியாகக் கடும் ஷெல் தாக்குதல்களை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி நகரை நோக்கியும்அதனை அண்டிய பகுதிகளையும் நோக்கிக் கடந்த வெள்ளிக்கிழமை முதல் நடைபெற்று வரும் அகோர ஷெல் தாக்குதல்களால் பல வீடுகளும் கட்டடங்களும் பலத்த சேதமடைந்துள்ளன.

இந்தச் ஷெல் தாக்குதல்களால் ஏற்கனவே பெருமளவு மக்கள் கிளிநொச்சி நகரிலிருந்து வெளியேறி விட்டதுடன் தற்போது அங்குள்ளவர்களும் வெளியேறி வருகின்றனர். கடந்த மூன்று நாள்களாகக் கிளிநொச்சியில் யாழ்.-கண்டி வீதியை இலக்கு வைத்தே கடும் ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன.

கிளிநொச்சி ஆஸ்பத்திரி மற்றும் கிளிநொச்சி மகா வித்தியாலயம் இந்தப் பகுதியிலேயேயுள்ளது. இதேநேரம் மணலாறுப் பகுதியிலிருந்து படையினர் மேற்கொண்டுவரும் கடும் ஷெல் தாக்குதல்களால் முள்ளியவளை முறிப்புப் பகுதிகளிலிருந்து மக்கள் இடம் பெயர்ந்து வருகின்றனர்.

முறிப்புப் பகுதியில் ஷெல் தாக்குதலால் பெருமளவு வீடுகள் சேதமடைந்துள்ளன. (ச-5)

# பூநகரியால் யாழ்.செல்லலாம்

# கொழும்புத் தமிழர்களுக்கு சிங்களவர்கள் எஸ்.எம்.எஸ்.

(கொழும்பு)

கொழும்பு வீதிச் சோதனைச் சாவடியில் கடமையில் நிற்கும் பொலிஸாரும் படையினரும் தமிழர்களைப் பார்த்து பூநகரி வரையான ஏ-32 பாதை திறக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் செல்வதற்குத் தயாராகுங்கள் என்று கூறி வருவதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

வீதியால் செல்லும் தமிழர்களை வழிமறிக்கும் படையினர் அடையாள அட்டைகளைப் பரிசோதித்த பின்னர் பூநகரியும் கைப்பற்றப்பட்டு விட்டதே என்று கூறுவதுடன் விமானத்தில் யாழ்ப்பாணம் செல்ல வேண்டிய அவசியம் இல்லை. பூநகரியால் போகலாம் எனவும் கிண்டல் அடிப்பதாகவும் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை அரச மற்றும் தனியார் திணைக்களங்கள் - நிறுவனங்களில் பணிபுரியும் சிங்களவர்கள் தங்களுடன் பணிபுரியும் தமிழர்களுக்குத் தொலைபேசி மற்றும் எஸ்.எம்.எஸ். குறுந்தூர செய்தி பரிமாற்றம் மூலமாக பூநகரியால் யாழ்ப்பாணத்துக்குச் செல்லுங்கள் என்று கூறி வருகின்றனர்.

இன்று திங்கட்கிழமை என்பதனால் அலுவலக நேரத்தில் தமிழ்ப் பணியாளர்கள் மீதான சிங்களவர்களின் இவ்வாறான கிண்டல் அடிக்கும் சம்பவங்கள் அதிகரிக்கலாம் எனக் கொழும்பில் அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

1995 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் கைப்பற்றப்பட்ட போது கொழும்பிலுள்ள தமிழர்களிடம் இவ்வாறான செயற்பாட்டில் சிங்களவர்கள் ஈடுபட்டிருந்ததாகக் கூறப்பட்டது. (ச-5)

## அடுத்த...

எத்தனை கட்சிகள் கூட்டத்தில் கலந்து கொள்ளும் என்பது தெளிவாக இல்லை. இது குறித்து கோவையில் செய்தியாளர்கள் கேட்டபோது முதல்வர் கருணாநிதி அந்தக் கூட்டத்திற்கும் தி.மு.கவிற்கும் தொடர்பில்லை என்று மட்டும் கூறினார்.

இதனிடையே தமிழக காங்கிரஸின் முக்கிய தலைவர்களில் ஒருவரான ஜி.கே.வாசன் காங்கிரஸார் சார்பில் ராஜீவைக் கொன்ற விடுதலைப்புலிகளை மறக்கவும் இல்லை. மன்னிக்கவும் இல்லை என்று கூறியிருக்கின்றார்.

விடுதலைப்புலிகள் மீதான தடையினை நீக்கக் கோரும் கட்சிகளைத் தமிழக மக்கள் நிராகரிப்பார்கள் என்று அவர் தெரிவித்தார். (ச-5)

## நவ.27இற்கு...

சுதந்திர முன்னணி சுவரொட்டிகளைத் தயாரித்துள்ளது.

இதேவேளை தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஒவ்வொரு வருடமும் மாவீரர் வாரத்தை ஒட்டி நவம்பர் 27 ஆம் திகதி விசேட உரை நிகழ்த்துவது வழக்கமாகும்.

2008 ஆம் ஆண்டு புலிகளின் தலைவர் மாவீரர் தின உரையாற்றுவதற்கு இடமளிக்கப் பட மாட்டாது என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்திருந்தார் என அவ் இணையத்தளச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## பேருந்து சேவைக்கு முன்...

பிக்கை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை பூநகரியைக் கைப்பற்றிய தன் மூலம் மிகவிரைவில் யாழ்.குடாநாட்டுக்கான ஏ-32 தரைவழிப் பாதை விரைவில் திறக்கப்படும் எனப் பாதுகாப்பு ஆய்வாளர்கள் எதிர்வு கூறியுள்ளனர்.

பூநகரியிலிருந்தே விடுதலைப்புலிகள் யாழ்.குடாநாட்டின் மீது எறிகணைத் தாக்குதல்களை நடத்தி வந்ததாகவும் தற்பொழுது பூநகரி இராணுவத்தினரால் மீட்கப்பட்டதைத் தொடர்ந்து யாழ்.குடாநாட்டின் மீது எறிகணைத் தாக்குதல் நடத்தும் முக்கிய பகுதியை விடுதலைப்புலிகள் இழந்திருப்பதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்குமிடையிலான ஏ-32 வீதியைத் திறப்பதாயின் பெருமளவு செலவும் பெரும் எண்ணிக்கையிலான கடற்படையினரும் பாதுகாப்புக்கு ஈடுபடுத்தப் பட வேண்டும் என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ச-5)

## பூநகரியிலிருந்து விடுதலைப்...

தெனவும் இறுதியில் ஒருவர் இருக்கும் வரை போராடுவோம் எனவும் வன்னியில் கூறப்பட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயானந்தமூர்த்தி ஏனைய கூட்டமைப் பினர்களுக்குக் கூறியதாக சண்டே லீடர் தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தின் பிரசாரங்களால் பிழையாக வழிநடத்தப்பட்டிருக்கும் தென்பகுதி மக்கள் எதிர்வரும் சில மாதங்களில் மோதலின் பாதிப்பு என்ன என்பதை உணர்ந்து கொள்வார்கள் என விடுதலைப்புலிகள், வன்னி சென்ற கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கூறியதாக அந்தப் பத்திரிகைச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆக்கபூர்வமான தீர்வுத் திட்டம் ஒன்றைப் பேச்சுவார்த்தை மேசையில் முன்வைத்தால் சமஷ்டி அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்த தாம் தயாரெனவும் விடுதலைப்புலிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடம் தெரிவித்திருப்பதாகச் சண்டே லீடர் பத்திரிகை தனக்கு நம்பகரமான வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்தி வெளியிட்டுள்ளது. (ச-5)

## முகமாலையில் 6 மணி...

சொந்தமான கிபீர் பைற்றர் ஜெற் விமானங்களும் முகமாலை, கிளாலி, பளைப் பகுதிகளில் குண்டுத் தாக்குதல்களை நடத்தியுள்ளன. இதனால் அங்குள்ள பல வீடுகள் அழிவடைந்துள்ளன.

இதேவேளை நேற்றுவரை அப் பகுதிகளில் எறிகணைத் தாக்குதல் தொடர்ந்த வண்ணம் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. இதேவேளை யாழ்ப்பாணம்-முகமாலை முன்னரங்கக் காவலரணுக்கு அருகில் விடுதலைப் புலிகளின் இலக்குகள் சிலவற்றின் மீது விமானப் படையினர் நேற்று விமானத் தாக்குதல் நடத்தியதாக விமானப் படைப் பேச்சாளர் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் எறிகணைப் பகுதிகள் பதுக்கி வைத்திருந்த இடமொன்று அடங்களாக சில இலக்குகள் நோக்கித் தாக்குதல் நடத்தப்பட்டதாக விமானப் படைப் பேச்சாளர் விங் கொமாண்டர் ஜனக நாணயக்கார கூறினார்.

ஜெற் விமானங்களைப் பயன்படுத்தி பிற்பகல் 1.30 மணியளவில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல் வெற்றிகரமாக அமைந்தது என அவர் குறிப்பிட்டார். இதேவேளை முகமாலை விடுதலைப்புலி களின் இலக்குகள் மீது ஜெற் விமானங்களைப் பயன்படுத்தி நேற்றுக் காலை 6.30 மணியளவில் தாக்குதல் நடத்தியதாகவும் விமானப் படைப் பேச்சாளர் மேலும் கூறினார். (ச-3,5)

## ஈழத் தமிழர் கொலையைக்...

உண்ணாவிரதப் போராட்டத்தினைத் தொடக்கி வைத்தார். விஜயின் தாயார் ஷோவா சந்திரசேகரன், புதுவை சட்டப் பேரவை உறுப்பினர் ஆனந்த் உள்ளிட்டோர் இதில் கலந்து கொண்டனர்.

பழ.நெடுமாறன், தா.பாண்டியன், சுப வீரபாண்டியன் ஆகியோரும் உண்ணாவிரதப் பந்தலுக்கு வந்து விஜய்க்கு சால்வை அணிவித்து விஜயின் தமிழ் உணர்வுக்கும் மனிதாபிமானத்திற்கும் நன்றி தெரிவித்தனர்.

இந்த உணர்வு இத்தோடு நின்று விடாமல் நீடிக்க வேண்டும் என்றும் விஜயிடம் கேட்டுக் கொண்டார்கள். உண்ணாவிரதத்தின் முடிபின் போது பேசிய விஜய்,

எனது ரசிகர் நற்பணி மன்றம் சார்பில் தமிழகம் எங்கும் உண்ணாவிரதங்கள் நடைபெறுகின்றது. இலங்கையில் போர் நிறுத்தம் வேண்டும். தமிழர்கள் கொல்லப்படுவது நிறுத்தப்பட வேண்டும். அதை வலியுறுத்தித்தான் இந்த உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது.

இலங்கையில் போர்நிறுத்தம் செய்யுங்கள் என்று நாங்கள் அங்கே போய் சண்டை போட முடியாது. அதனால்தான் உண்ணாவிரதத்தின் மூலமாக எங்கள் உணர்வுகளை வெளிப்படுத்துகின்றோம்.

எங்களைப் போலவே பல்வேறு தரப்பினரும் தங்களது உணர்வுகளை வெளிப்படுத்தி வருகின்றார்கள். நிச்சயம் இலங்கைப் பிரச்சினை முடிபுக்கு வரும். போர்நிறுத்தம் வரும் என்று தெரிவித்தார்.

தமிழ் உணர்வுடன் இந்தப் போராட்டம் நடக்கின்றது. விஜயை காண இங்கு ரசிகர்கள் வரவில்லை. மாறாக தமிழன் என்ற உணர்வுடன் திரண்டுள்ளனர் என உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய நடிகர் விஜயின் தந்தையாரான எஸ்.ஏ. சந்திரசேகரன் தெரிவித்தார்.

பிறமொழிப் படங்களில் நடிப்பதில்லை எனவும் தமிழில் மட்டுமே நடிப்பது என்ற முடிபில் விஜய் இருப்பதாகவும் அவர் கூறினார். இவ் உண்ணாவிரதப் போராட்டத்தில் தமிழ்த் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் தா.பாண்டியன் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். (ச-5)

## யுத்தம் நிறுத்தப்படும்...

இதேவேளை ஈழப் பிரச்சினை தொடர்பாக இன்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நடத்தும் அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தி.மு.க. கலந்து கொள்ளாது எனவும் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அறிவித்துள்ளார்.

கோவையில் நடைபெறும் தி.மு.க. சார்பிலான அண்ணா நூற்றாண்டு விழா மற்றும் மேற்கு மண்டல மாநாட்டில் கலந்து கொள்வதற்கென வந்திருந்தபோது ஊடகவியலாளர்களுக்கு இதனைத் தெரிவித்திருந்தார்.

இந்தப் பிரச்சினையில் ஆர்வம் காரணமாக ஒவ்வொருவரும் தனித்தனியே முயற்சி எடுக்கின்றார்கள். இதில் தவறு ஏதும் இல்லை. ஈழப் பிரச்சினையை ஐ.நா. பாதுகாப்பு ஆணைக்குழுவுக்கு இந்திய அரசு கொண்டு செல்ல வேண்டும் என்று டாக்டர் இராமதாஸ் வலியுறுத்தியிருப்பதாக அறிந்தேன்.

நான் சென்னை சென்ற பிறகு அதன் முழு விபரமும் தெரிந்து கொண்டு அதன் பிறகு இதுபற்றி எனது கருத்தைத் தெரிவிப்பேன். இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து பிரதமரையும் சோனியா காந்தியையும் சந்தித்துப் பேசியுள்ளேன்.

மேலும் தி.மு.கவைச் சேர்ந்த மத்திய அமைச்சர்களான டி.ஆர்.பாலு, ஆர்.ராசா ஆகியோர் மூலம் இலங்கையில் என்ன நடந்து கொண்டிருக்கின்றது என தினமும் கேட்டு அறிந்து வருகின்றேன். இப்பிரச்சினை தொடர்பாக தி.மு.க. செயற்குழுக் கூட்டத்திலும் அனைத்துக் கட்சிக் கூட்டத்திலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் ஜனாதிபதி ராஜபக்ஷவின் நடவடிக்கை நம்பத்தகுந்ததாக இல்லை.

காரணம் தீவிரவாதம் மற்றும் உள்நாட்டுப் போரை முடிபுக்குக் கொண்டு வருவதாக அவர் சொல்கின்றார்.

ஆனால் புலிகளை அடக்குவோம் என்ற பெயரில் இலங்கைத் தமிழர்களுக்கு சொல்லொண்ணாத் துன்பத்தை அவர் அளித்து வருவது திருப்திகரமான செயல் அல்ல எனவும் தெரிவித்தார். (ச-5)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.11.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.